
"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2002

சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெள்ளி விழா சிறப்பிதழ்











SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM

லண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


Royal
Jewelry
றோயல் ஜுவல்லரி
* மனம் கவரும் தங்க நகைகள்
*தங்கம் - கரட் உத்தரவாதம்
*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
*உங்கள் தேவைகளுக்கேற்ற
வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய்
தயாரிக்கும் வசதிகள்
* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து
கொடுக்கப்படும்
புன்னகைக்கு நிகர்
எங்கள் பொன்னகையன்றோ!
வாருங்கள் வந்து பார்த்து
வாங்குங்கள்!!
287, High Street North , East Ham,
Manor Park, London E12 6SL
Tel: 0208 472 5500

மணி 10

# கலசம்
KALASAM

ஒலி 39

www.smsuk.org.uk E-mail: kalasam@hotmail.com

## வேருக்கு நீருற்றுவோம்

கலசத்தின் 39 வது இதழ் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவுவிழாவிற்கு அறைகூவி உங்கள் கைகளில் மலர்கிறது ! 1977ஆம் ஆண்டு 7 பேருடன் முளைவிட்ட எமது சங்கம் இன்று பாடசாலை, முதியோர் இல்லம், சமயப் பத்திரிகை, சமூகத்தொண்டு எனப்பல கிளைகள் விட்ட பெருவிருட்சமாக வளர்ந்து பலனளிக்கிறது. இதற்குக் காரணம் தடைகண்டு தளராத மனவுறுதி கொண்ட பல தொண்டர்களின் தன்னலமற்ற உழைப்பும் அதற்கு மக்களிடமிருந்து கிடைத்த வரவேற்பும் என்றால் மிகையாகாது.

**எதற்காக இந்தச் சங்கம்? எதற்காக ஒரு கலசம்?**

தாய் நாட்டிலிருந்து பல்வேறு காரணங்களால் புலம் பெயர்ந்த நாம் வேரோடு பெயர்த்து நாட்டப்பட்டுள்ள மரங்களைப் போல் அந்நிய மண்ணில் தழைக்க முற்படுகிறோம். எமக்கும் எமது குழந்தைகளுக்கும் வேராகத் திகழ்வது எமது தனித்துவமான கலாசாரமே. அதில் தொன்மைமிக்க தமிழ்ப் பண்பாடும் சைவசமயமும் பின்னிப் பிணைந்துள்ளன. இந்த வேரை நாம் பாதுகாக்கா விடில் தமிழர் அந்நிய நாடுகளில் அடையாளம் தெரியாமல் போவது திண்ணம். செம்மறியாட்டு மந்தையுள் வளர்ந்தாலும் சிங்கக்குட்டி தான் யாரென்பதை மறக்கலாமா? நாம் ஆங்கிலேயருடன் சேர்ந்து வாழ முடியுமே தவிர ஒரு நாளும் ஆங்கிலேயராகி விடமுடியாது! We Will always be British ***Asians.***

எமது குழந்தைகள் பலர் 5 வயதுடன் தாய்மொழியைத் தொலைக்கும் துர்ப்பாக்கிய நிலையை இன்று நம் கண்முன் காண்கின்றோம். கண்டும் வாளாவிருக்கின்றோம். தாய் நாட்டில் தமிழ் சாகாமலிருப்பதற்காக நமது உறவினர் உயிரை அர்ப்பணிக்க இங்கோ உயிர்வாழ்வதற்காகத் தமிழ் சாவதைக் கண்டும் நாம் காணாதிருக்கிறோம் ! **இது எமது சந்ததி தமிழராகவும் இல்லாமல் ஆங்கிலேயராகவும் இல்லாமல் அடையாளம் அற்றுப் போகவே வழிகோலும்.**

தாய் நாட்டில் நிகழும் போராட்டம் எந்தத் தொன்மையை அழியாமல் பாதுகாக்க நடைபெறுகிறதோ அந்த உயிர்நாடியை இங்கே எமது சந்ததி இழந்துவிடக்கூடாது! இன்றைய எமது சிறார்களைப் பார்க்கும் போது இந்த அச்சம் மேலிடுகிறது. மனதைப் பண்படுத்தும் தமிழ் இலக்கியம், மனிதனை நெறிப்படுத்தும் சமய தத்துவம்-இவ்விரண்டின் ஆழத்தையும் அறியாமலே வளரும் நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுளனர்.

இதைத் தடுக்க நாம் அனைவரும் கைகோத்து உழைக்கவேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. இந்த வேருக்கு நீரூற்றும் பணியில் எமது சங்கமும் கலசமும் முழுமூச்சுடன் பாடுபடும். இதில் உங்கள் அனைவரது பங்களிப்பும் தேவை! **உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.** அவை எமது பணிக்கு உரமூட்டும்.

தொடரும் இந்தப் பணியில் இன்னோர் மைல் கல்லாக சிறுவர்க்கான பாடங்களைத் தொடர்ந்து தர ஆரம்பித்துள்ளோம். சமயபாடப் பரீட்சைகளும், பட்டறைகளும் (Workshops) நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கலசம் இப்போது தமிழ்ப் பாடசாலைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப் படுகிறது. சிறுவர் பகுதியில் வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுவோருக்குப் **பரிசுத்திட்டமும்** அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. பிள்ளைகளை இதில் பங்கெடுக்க ஊக்குவிக்குமாறு ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் அன்புடன் வேண்டுகிறோம்.

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு. ந. நவநீதராசா, திரு.வ.இ.இராமநாதன் திரு.சிவ.அசோகன், திரு.ந.சிவராசன், திரு.சு.வைத்தியநாதன், திரு.சி.தர்மலிங்கம், திரு.ச.யோகநாதன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி திரு.ச. தம்பு

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

## வாழ்த்துகின்றோம்!

ஒரு பத்துவருடத்துக்குட்பட்ட வயது தான் எங்கள் கலசம் என்ற குடும்ப உறவின் காலம். ஆனால் ஒரு நூற்றாண்டு போன்ற வைரம் உணரப்படுகின்றது. இக் கலச குடும்பத்தின் தலை மகனாக இருந்து கலசம் என்ற குழந்தையை முதல் வயதில் இருந்து இன்று பத்து வயது வரை பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்து தற்போது கலசம் ஆசிரியர் பதவியிலிருந்து விடைபெற்றுத் தனக்கென வகுத்துக் கொண்ட ஒரு புதிய பாதையில் பயணத்தைத் தொடங்குகின்றார். இது வரை காலமும் அவருக்குத் துணை ஆசிரியராக இருந்து கடமையாற்றிய கலசத்தின் இளைய மகன் அற்புதானந்தனிடம் பொறுப்புக்களைக் கொடுத்து விட்டுச் செல்கிறார். ஆனால் கலச குடும்பத்தில் அவர் என்றும் ஒரு அன்பர். எங்களுக்கெல்லாம் என்றும் ஒரு நண்பர்.

கடந்த பத்து ஆண்டுகாலமாக இவர் கலசம் பத்திரிகை மூலம் சமூகத் திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையை எங்கள் ஆசிரியர்குழுவும், பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தினரும் என்றும் மறக்கமாட்டார்கள். அவருக்கு எமது பசுமையான நன்றிகளைத் தெரிவித்து அவரது எழுத்துலகப் பணி தொடர்ந்து பல்லாண்டு பல்லாண்டு காலமாக நீடிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வணங்கி நிற்கிறோம்

**-ஆசியர் குழு-**



திரு.மு.நற்குணதயாளன் அவர்கள் ஈழம் சென்றிருந்தபோது கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி சேவா நம்பிக்கை நிதியத்தினால் **தொண்டு நெறி மாமணி** என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்

**சிந்தனைத் துளி !**

* துன்பத்தைக் கண்டு அஞ்சாதவனே இன்பத்தை அடைவான். இன்பமாகிய மாளிகைக்குத் துன்பம் ஒரு வாயில் போன்றது. வாயிலில் நுழையாமல் ஒரு மாளிகைக்குள் போகமுடியாது. அது போல் துன்பம் எய்தினாலொழிய இன்பம் எய்தாது. துன்பம் வருகின்ற போது அதை அஞ்சாது வரவேற்பவனே தீரன்.

ஒரு வாசகரின் பார்வையில்.........

# சங்கம் வளர்க்கும் சமுதாயம்

**"ஓடம் வண்டியில் ஏறுவதும் வண்டி ஓடத்தில் ஏறுவதும் இயல்புதானே"** என்பது எம் தாயகப் பழமொழி. சங்கம் ஒன்றைச் சமூகம் வளர்ப்பதும் சமூகம் ஒன்றைச் சங்கம் வளர்ப்பதும் இங்கு நாம் காணும் நிதர்சனம். ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்க்கும் காலாண்டு வெளியீடான கலசம் சஞ்சிகை ஒன்று சமீபத்தில் கிடைத்தது. பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்க வெளியீடான இது தற்போது இலவசமாக வழங்கப்படுகிறது. கடந்த பத்து வருடங்களாகத் தொடர்ந்து வெளியாகும் இது இச்சங்கத்தின் பணிகளுள் பெருமைதரக்கூடிய ஒன்று. சஞ்சிகையைப் படித்ததும் சங்கப் பணிகள் பற்றி அறியவேண்டும் என என்னுள் எழுந்த ஆவலைத் தடுக்க முடியவில்லை.

தமிழ்ப் புத்தாண்டு விழாக் காணச் சங்க மண்டபம் போனேன். பூசை, கூட்டுவழிபாட்டைத் தொடர்ந்து பச்சிளம் பாலகர்களின் திருமுறைப்பாடல்கள், மழலைச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள். பின் இளைஞர்களின் கலந்துரையாடல். ஈற்றில் அறிஞர் ஒருவரின் கருத்தாழமுள்ள சொற்பொழிவு. யாவும் உள்ளத்தை நிறைத்தன. இதே போல சமயகுரவர் குருபூசை, மற்றும் சமய, கலாசார விசேடநாட்களும் கொண்டாடப்படுவதாய் அறிந்தேன்.

மற்றொருநாள்– அது ஒரு ஞாயிற்றுக்கிழமை– காலை சங்கமண்டபம் போனேன். முப்பது–நாற்பது பேர்–மதியம் திரும்பியவர்கள் – கூடியிருக்கக் கண்டேன். பெரும்பான்மையோர் தாய்மார்கள். யாரும் துணையில்லாது வாரத்தில் பல நாட்களைத் தனிமையில் கழிக்கும் இவர்கள் ஞாயிறு காலையில் இங்கு கூடித் தத்தம் பிரச்சினைகளையும், மகிழ்ச்சி, துன்ப நிகழ்வு நினைவுகளையும் பகிர்ந்து மன அமைதி கொள்ளுகிறார்கள். அவர்கள் கூடுவது அதற்காக மட்டுமல்ல. அவர்கள் அறியவும் பயன்பெறக்கூடியனவுமான நிகழ்ச்சிகளையும் சங்கம் ஒழுங்கு செய்கிறது. சட்டத்தரணிகள், வைத்தியநிபுணர்கள், சமயவாணர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்கிறது. தாய்நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலை முன்னேற்றங்கள், இடர்ப்பாடுகள் பற்றியும், இரத்த அழுத்தம், நீரிழிவு,தொய்வு, வாதம், கண்பாதிப்பு, இருதயக்கோளாறு போன்ற வியாதிகள் பற்றியும், அவற்றிலிருந்து விடுபடவோ, பெருமளவு பாதிக்கப்படாமலோ இருப்பதற்கான வழிமுறைகளைப் பற்றியும், புராண இதிகாசங்களில் வரும் கதைகள் அவற்றின் தாற்பரியங்கள், திருமுறைகள், அருட்பாடல்களின் விளக்கங்கள் பற்றியும் அறிவுரை நிகழும். முடிவில் சந்தேகங்கள், விளக்கங்கள் அடங்கிய கலந்துரையாடலும் நடக்கும்.

சங்கம் நடத்தும் ஞாயிறு பாடசாலையில் தமிழ், சைவம், பண்ணிசை, இசைக்கருவிப் பயிற்சி ஆகியன போதிக்கப்படுகின்றன. தாய் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எம் சமய, மொழி, கலாசாரம், வாழ்க்கைநெறி, இவற்றை இளம் தலைமுறையினர் மறந்துவிடக்கூடாதென்பதற்காக நடத்தப்படும் இப்பாடசாலை நம்மவர்க்கு ஒரு வரப்பிரசாதம்.

வெளி நாடுகளிலிருந்து இங்கு வரும் அறிஞர் பெருமக்களையும், அவ்வாறானவர்களைத் தருவித்தும் அவர்களைக் கௌரவிப்பதும் சங்கப் பணிகளுள் ஒன்று.

இங்கு வாழ்ந்து மரிக்கும் சைவமக்கள் பலகாலமாக தம் இறுதிப் பயணத்தைச் சமயாசாரப்படி மேற்கொள்ள முடியாதிருந்தது. இதனை நிவர்த்தி செய்யத் தகுதிவாய்ந்த குருக்கள் ஒருவரைத் தருவித்துக் கடந்த இருவருடங்களுக்கு மேலாக ஒருவரின் இறுதிக் கிரியைகள் செய்தற்குச் சங்கம் வழி சமைத்துள்ளது.

இருபத்தைந்து வருடம் பலவேறு வழிகளிலும் சைவத்தமிழ்ச் சமுதாயத்துக்குச் சேவைசெய்து வளர்க்கும் ஒப்பற்றதொரு நிறுவனமாக விளங்கும் சைவமுன்னேற்றச் சங்கம் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நின்று நிலாவ இறையருளை வேண்டுவோம்.

– சிவம் –

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"** எனும் கந்தபுராண வரித்தொடர் எமது சங்கத்தின் தாரகமந்திரம். இதனை அடைய, இச்சைவ நீதியை நாம் தழுவி எமது பணிகளைச் செய்ய, சங்கம் தலைமுறை வழியே தாய் மொழியை வளர்க்கப் பாங்கான ஒரு பாடசாலை மூலம் சமய, சமூகவிழுமியங்களை மாணவர் களுக்கு எடுத்துக்காட்டுகிறது. திண்ணம்.

உலகமெல்லாம் சைவத்தின் ஓங்காரம் ரீங்காரமிடவேண்டும் என்பதற்காகவே ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம் என்று நாம் கலசத்தின் வாயிலாக அமுதத்தைத் தருகின்றோம். இக்கலசம் நல்லவற்றை நயமாகத் தரும் சக்தி மிக்க சாதனம். சிவனின் புண்ணிய கருத்துக்களை மாணவர்களும், மற்றவர்களும் சிந்தித்துச் சிறைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்ற

# அறவழியில் சைவமுன்னேற்றச் சங்கம்

கௌரவ பொதுச் செயலாளர் சதாசிவம் ஆனந்தியாகர்

உயர்நோக்கத்தின் நூல்வடிவம்.

சைவநீதியைப் பின்பற்றி வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்கின்ற படிப்பி னையை முன்வைத்துப் பெரியோர்களைக் கனம் பண்ணலும் அவர்களைப் பராமரிப்பதும் தமிழர் குடும்ப வழக்கம். இந்நாட்டில் எமது பெற்றோரையும், முதியோர்களையும் முன்னிலைப்படுத்தி அவர்களுக்கும் ஒரு பங்கு அமைத்து **"முதியோரைப் பேணல் முறைமையில் எல்லாம் தலை"** என்கின்ற வாக்கியத்தை ஏற்றுக்கொண்டு அவர்களது மனச்சஞ் சலங்களிலும், குறைகளிலும் நாம் பங்கேற்கின்றோம்.

சைவநீதியை வளர்த்தவர்கள், வாழ்ந்து காட்டியவர்கள் எம்முன்னோர்கள். சமயப் பெரியார்கள், நாயன்மார்கள் இவர்களது வழிகளைப்படிப்பதும், படிப்பிப்பதும் திரும்பத்திரும்ப ஆராய்ந்து அவர்கள் காட்டிய பாதையில் எமது வாழ்க்கையை அமைக்க ஆர்வம் செலுத்துவதும் எமது சங்கத்தின் வழியாக இருந்து வருகின்றது. நாயன்மார்களையும் ஏனைய சைவப்பெரியார்களையும் வழிபடுவதும் அவர்கள் தந்து சென்றுள்ள தமிழமுதத்தைப் பருகி, பரப்பி அதன் சிறப்பையும் பக்தியையும் உணர்ந்து மன அமைதி காண சங்கம் வழிபாடுகளை நடத்துகின்றது. இவ் வழிபாடுகளின் வழியே எமது நெறி இந்நாட்டில் பல வீடுகளிலும், பலரது மனங்களிலும் முன்னேறியுள்ளது என்பது

வாசிக்கும் மனதில் இறைவன் என்னும் கருப்பொருளின் பருமனையும் உணர்த்தி அதன்மூலம் அன்பு, எளிமை, விட்டுக்கொடுத்தல், சேவை, உணர்வுகளை மதித்தல், நல்லனவற்றை உரமாக உரைத்தல், இறை சிந்தனையை இயக்கி மனித மனதை மேலும் மேலும் பக்தியைப் பற்றி வாசிக்கச் செய்தல் இவைகளே கலசத்தின் மூலம் சங்கம் சாதிக்கவிரும்பும் ஈசனது நெறி. இது உயர்ந்த நோக்கங்களுக்காக அருட்காட்சியாக இருக்கும் அன்னையின் அன்பைக்காட்டும் அமுதகலசம். இதன் வாயிலாக நாம் எமது சமயத்தின் உண்மைகளை உங்களுக்கு உணர்த்தியுள்ளோம் என்பதும் உண்மையே.

சைவம் என்பது ஆலய வழிபாடுமட்டுமல்ல. இறைவனைத் தேடி அலைவது மட்டுமல்ல. இது ஒரு வாழ்க்கை முறை. எதிலும் முறைசெய்து நிறைவாய் வாழ்வது ஒரு சமய வாழ்க்கையே. இது சைவ சமயம் அடிக்கோடிட்டுக் காட்டும் சீரியகருத்து. இவ்வாழ்க்கை முறைக்கு ஓர் அம்சமாக இருப்பது உறவுகள். உறவுகளின் மூலம் கூட்டாக ஒன்றைச் செய்து அதன் பலனைப் பரந்துபட்ட அளவில் சமுதாயம் பெற்று நன்மை அடைவதால் சமயம் வெற்றி காண்கின்றது. **சமயத்தின் வெற்றி ஒரு தனிமனிதன் தன்னை ஞானியாக்கிக் கொண்டு இறைவனுடன் இரண்டறகலத்தல் மட்டுமல்ல.** இதுவே நோக்கமெனில் எமது நாயன்மார்களும், ஞானிகளும், சிவாசாரியர்களும் சுயநலத்துடன் தாங்கள்

கண்டுபிடித்த உண்மையைத் தம்முடனேயே ரகசியப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அவற்றைத் திருமுறைகள் வழியாகவும் திவ்வியப் பிரபந்தங்கள் வழியாகவும், அருட்பாக்கள் வழியாகவும் விட்டுச் சென்றிருக்க மாட்டார்கள். சுயநலமில்லாத சமய வாழ்க்கையின் உயர்ந்த எடுத்துக்காட்டு இது.

இதன் பண்புகளை உணர்ந்தே எமது சங்கம் சமய நெறியின் முக்கிய இயல்பாக ஒற்றுமையுடன் தனது நிர்வாகத்தை நடத்துகின்றது. பதவி ஆசைகள், சேவைகள் மூலம் தனிமனிதர்கள் தங்களை உயர்த்திக்கொள்வது, ஒரு குறிப்பிடப்பட்ட குடும்பத்தினருக்கோ, சைவமக்களுக்கோ மட்டும் எமது பணிகள் அமைவது போன்ற முறைகேடுகளை முயன்று தவிர்ப்பது எமது சங்கத்தின் சிறப்பம்சமாகும். வருடம்தோறும் நிர்வாகசபைத்தெரிவு பொதுமக்களின் பார்வைக்கு அமைய சட்டங்களுக்கு ஏற்ப நாம் செய்வதும், மகா சபையின் அனுமதியுடன் எமது பணிகளை நாம் தொடர்வதும் எமது 24 ஆண்டுகால சரித்திரத்தின் சான்றுகள். மாதாந்தம் கணக்கு வழக்குகளை அச்சில் வைத்திருப்பது, அவைகள் ஆண்டுமுடிவில் கணக்காய்வாளர் களால் பரிசோதனை செய்யப்பட்டுக் கேள்விகள் கேட்கப்பட்டு ஒழுங்காக இருக்கின்றன என்று இலச்சினை குத்தப்படுவது எமது சைவ நீதியில் நாம் கொண்டுள்ள அப்பழுக்கற்ற நம்பிக்கையைப் பறைசாற்றுகின்றது.

**பொருள், பதவி என்பன பணி செய்வதற்கு ஒரு நல்ல துணையே தவிர அவைகளே பணிசெய்யும் மனித மனதை ஆளும் முக்கிய எண்ணங்கள் அல்ல** என்பதை சங்கத்தின் ஆட்சிக்குழு தனது ஆளுமையால் உணர்த்திவந்துள்ளது.

**அறம்** எனப்படுவதே சமயம் என்றும் வாழ்க்கை என்றும் அமைத்துக் கொடுத்தவர்கள் எமது முன்னோர்கள். சமயத்தின் வழியே ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்தால் சமுதாயத்திற்குக் கேடுகள் உண்டாகா என்ற ஒரு நெறியில் சமயம் வாழ்வியலுடன் ஒன்றியிருந்தது. அறம் என்பது இறை நெறியிலிருந்து புறம்பானதல்ல என்ற நிலையில் எமது நாகரிகம் இருந்தது. ஏழையின் பார்வையில் இறைவனையும் இறைவனின் செயல்களில் எல்லாம் பிறரது நன்மைகளையும் சிறப்பித்துச்சொல்வது எமது சமயம். **மரணத்தின் உண்மையை உணர்ந்து கொள், முடிவில் வாழ்க்கை என்பது சாம்பல் என்று காட்டி நிற்கும் உயர்ந்தகொள்கை எமது சைவத்தினதே.** வேற்றுமைகளை அறுத்து சமரச நிலையில் மனதை வைத்திருக்கவேண்டும் என்று ஒவ்வொரு தரமும் எம்மை நினைவுறுத்த நாம் நீறிட்டுக்கொள்கின்றோம். அகத்தின் இந்த உணர்வின் அழகை முகத்தில் சாம் பலாகக் கோடிட்டுக் கொள்கிறோம். மரணத்தின் முன் மனித அன்புக்கு எம்மைச் சரணாக்கிக் கொள்வோம். இதன்மூலம் எம்பிரானின் அன்பைச் சுலபமாக சம்பாதிக்கலாம் என்பதையே இந்த நீறு அணிவது எமக்குக் காட்டுகின்றது.

எவ்வுயிருக்கும் இயல்பாக இருக்கும் எம் இறைவன் தன்னைச் சுடுகாட்டை விரும்பித் தேர்ந்தெடுத்து உறைபவனாகக் காட்டு கின்றான். மரணத்தின் மிச்சமாக இருக்கும் எலும்பும், தோலும், மண்டையோடும் தனக்குரிய அணிகலன்களாகக் கொண்டு ள்ளான். இச் சுடலையாண்டியைப் பார்த்து நாம் பாடம் படிப்பதே சமுக சேவையின் முதற்கட்டமாகும். எனவே சைவமுன்னேற்றச் சங்கம் தனது சமயத்தின் உண்மை "மரணத்தால் வீணாகிப் போகும் வாழ்க்கையை அது நிகழும் முன் மற்றவருக்கும் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வோம்" என்பதே என்றும் சமயப்பணிக ளெல்லாம் சமுதாயப் பணிகளே! சமுதாயப் பணிகளெல்லாம் சைவப் பணிகளே! என்றும் உணர்ந்துள்ளது. இதனால் சைவ சமயக் கருத்துணர்வின் ஊடாகச் சமுக சேவை என்ற பொன் மொழியை நாம் கடைப் பிடிக்கின்றோம். இத் தெளிவினால் எமது இனமும் மனிதகுலமும் உய்வடையும்.

இதுவே சைவநீதியும் உலகமெல்லாம் விளங்கவேண்டிய ஒளியுமாகும். *

## சங்கம் செயற்படுத்தும்

# இரண்டு திட்டங்கள்

இலங்கையில் இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுள் திருமண வயதை எட்டியுள்ள இளம் பெண்கள் பலருள்ளனர். வாழ்க்கையின் வசந்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமது கடந்தகாலச் சோக சம்பவங்களும், அவற்றின் நினைவுகளும் இனி அமையக்கூடிய எதிர்காலத்தின் இனிய நிகழ்வுகளால் சற்றே மாறும் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றார்கள். இச் சகோதரிகள் எமது சமூகத்தில் புன்னகையுடன் மட்டும் உலா வருகின்றார்கள். கையிலும், காதிலும், கழுத்திலும் தமிழ்ப்பெண்களுக்குரிய அழகான ஆபரணங்கள் தாங்கி எமது தங்கைகளாக சமூகத்தில், குடும்ப நிகழ்ச்சிகளிலும் பொது நிகழ்ச்சிகளிலும் முன்னின்று கலந்துகொள்ளத் தயங்குகின்றார்கள். இந்தக்குறையை எமது உடன்பிறப்புக்களுக்கு ஏற்பட்டுள்ள ஒன்றாகக் கருதி இதற்கு நிவாரணம் தேட சங்கம் தனது வெள்ளி விழா ஆண்டில் **தங்கத்திட்டத்தை** ஆரம்பித்துள்ளது. இதுவரை இதற்கு நல்ல ஆதரவும் ஊக்கமும் கிடைத்துள்ளது. ஆனால் இது ஒரு பாரியமுயற்சி இதில் உங்களது பங்கு அவசியம் தேவைப்படுகிறது.

மற்றொரு பணியாக இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் **கண்பார்வை இழந்தவர்களுக்குக்** கைகொடுக்கும் சேவையில் சங்கம் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. பார்வை இழந்த குழந்தைகள் வாசிக்கவும், எழுதவும், கல்விகற்கவும் ஏதுவாக அமைகின்ற உபகரணம் BRAILLE எனப்படும். மேற்குநாடுகளில் பார்வை இழந்தவர்கள் தன்னம்பிக்கையுடன் கல்வி, தொழில், பயிற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி சமுதாயத்தில் சம நிலையில் வாழ இவ்வியந்திரம் வழிவகுத்துக்கொடுக்கின்றது. ஈழத்தில் எமது உறவுகளுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனச் சங்கம் முன்வந்துள்ளது. இதற்கான பொருளுதவியை எமது ஆட்சிக்குழு மேலைநாட்டிலுள்ள தமிழன்பர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

எமது பணிகளுக்கெல்லாம் உங்களது வாழ்த்துக்களும் நல்லுதவிகளும் துணையாக அமைந்து வந்துள்ளன. எமது நிதி திரட்டும் திட்டங்களுள் ஒன்றாக சர்வதேச தொலைபேசி இணைப்பு மூலம் Alpha Telecom நிறுவனத்தினர் எமக்கு உதவ முன்வந்துள்ளனர். உங்களது உறவினர்களுடன் நீங்கள் வெளிநாடுகளுக்குத் தொடர்பு கொள்ளும்போது **0800 279 8130** இலக்கம் மூலமாக இணைப்பைஏற்படுத்திக்கொண்டால் உங்களுக்கு மேலதிகச் செலவின்றி இத்தொடர்பு கிடைக்கும். அதேவேளையில் சங்கத்திற்கும் Alpha Telecom நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக நிதிகிடைக்கும். இத்திட்டத்தின் மூலமாக சங்கத்தின் பல பணிகளில் உங்களது பங்கும் சேர்கின்றது.

எமது சேவைகளின் சிறு பகுதியை மட்டும் இங்கு விளக்கியுள்ளோம். எமது வெள்ளி விழாவில் கலந்து பங்கெடுப்பதன் மூலம் எமது பணிகளை நீங்கள் மேலும் தெரிந்து கொள்ள வாய்ப்புண்டாகும். எமது சங்கத்தில் ஒரு அங்கத்தவராக நீங்கள் இணைவது எமக்கு உங்களது ஆன்ம பலமும், பொருளுதவியும், பெருக ஏதுவாக அமையும். எங்களது தொண்டுகளில் பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் நாம் நன்றிகளை இச் செய்தி மூலம் தெரிவிக்கின்றோம். எமது வெள்ளி விழாவை எம்முடன் இணைந்து கொண்டாடி எமது, சந்ததியினரும் உறவினர்களும் தாயகத்திலும், வந்து குடியேறிய இடங்களிலும் மாண்புடன் வாழ வழிசெய்ய முனைந்துள்ள எங்கள் சங்கத்தை வாழ்த்தி, விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம். ❑

# The Purpose of Religion

*HH Sri Chandrasekarendra Saraswathi Sankaracharya Swamigal of Kaanchi Kaamakodi Peedam.*

Religion is the means of realizing dharma, artha, kama and moksa. These four are called purusarthas. In Tamil, dharma is called "aram"; artha is known as "porul'; and kama and moksa are called "inbam", and "veedu" respectively.

What a man wants for himself in his life- the aims of a man's life- are the purusarthas. What does a man want to have? He wants to live happily without lacking for anything. There are two types of happiness: the first is ephemeral; and the second is everlasting and not subject to diminution. Kama or Inbam is ephemeral happiness and denotes worldly pleasure, worldly desires. Moksa or Veedu is everlasting happiness, not transient pleasure. **It is because people are ignorant about such happiness, how elevated and enduring it is, that they hanker after the trivial and momentary joys of Inbam.**

Our true quest must be for the fourth purusartha, that is veedu or moksa. The majority of people today yearn for the third purusartha that is inbam. When you eat you are happy. When you are appointed a judge of the high court you feel elated. You are delighted when presented with a welcome address by some institution, aren't you? Such types of happiness are not enduring. The means by which such happiness is earned is porul. Porul may be corn, money, house. It is this porul that is the way to happiness. **But the pleasure gained from material possessions is momentary and you keep con stantly hungering for more.**

Moksa or veedu is the state of supreme bliss and there is no quest beyond it. We keep going from place to place and suffer hardships of all kinds. Our destination is our home. A prisoner goes to his veedu or his home after he is released. But the word veedu also means release or liberation. Since we are now imprisoned in our body, we commit the grave mistake of believing that we are the body. The body is in fact our prison. Our real goal is the bliss called moksa. We must find release from the gaol that is our body and dwell in our true home. God has sentenced us to gaol (that is he has imprisoned us in our body) for our sins. **If we practice virtue He will condone our sins and release us from the prison of our body before the expiry of the sentence.** We must desist from committing sinful acts so that our term of imprisonment is not extended and endeavor to free ourselves and arrive in our true home, our true home that is the Lord. This home is bliss that passeth understanding, bliss that is not bound by the limitations of time, space and matter.

Lastly, I speak of the first purusartha, dharma or aram. Dharma denotes beneficent action, good or virtuous deeds. The word has come to mean giving, charity. "Give me dharmam. Do dharmam, mother, " cries the beggar. We speak of "daana-dharma" [as a portmanteau word]. The commandments relating to charity are called "ara-kattalai"in

Tamil. Looked at in this way, giving away our artha or porul will be seen to be dharma. But how do we, in the first place, acquire the goods to be given away in charity? The charity practised in our former birth- by giving away our porul- it is that brings us rewards in this birth. **The very purpose of owning material goods is for the practice of aram**. Just as material possessions are a means of pleasure, so is dharma a means of material possessions. It is not charity alone that yields rewards in the form of material goods; all dharma will bring their own material rewards.

If we practice dharma without expecting any reward in the belief that Isvara gives us what he wills- and in a spirit of dedication, the impurities tainting our being will be removed and we will obtain the bliss that is exalted. The pursuit of dharma (aram) that brings in its wake material rewards will itself become the means of attaining the Paramporul. Thus we see that dharma, while being an instrument for making material gain and through it of pleasure, becomes the means of liberation also if it is practised unselfishly. Through it we acquire material goods and are helped to keep up the practice of dharma. This means that porul itself becomes a basis of aram. It is kama or inbam (or the desire for it) alone that neither fulfils itself nor becomes an instrument of fulfilling some other purpose. It is an instrument that destroys everything dharmic thoughts, material possessions, liberation itself.

All the same it is difficult, to start with, to be without any desire altogether. **Religion serves to rein in desire little by little and take a man, step by step, from petty ephemeral pleasure to the ultimate bliss.** First we are taught the meaning and implications of dharma and how to practise it, then we are instructed in the right manner in which material goods are to be acquired so as to practice this dharma; and, thirdly, we are taught the proper manner in which desires may be satisfied. It is a process of gaining maturity and wisdom to forsake petty pleasure for the ultimate bliss of moksa.

Moksa is release from all attachments. It is a state in which the Self remains ever in untrammelled freedom and blessedness. The chief purpose of religion is to teach us how this supreme state may be attained.

We know for certain that ordinary people do not achieve eternal happiness. The purpose of any religion is to lead them towards such happiness. Everlasting blessedness is obtained only by forsaking the quest for petty pleasures. The dictates of dharma help us to abandon the pursuit of sensual enjoyments and endeavor for eternal bliss. They are also essential to create a social order that has the same high purpose, the liberation of all. Religion, with its goal of liberation, lays down the tenets of dharma. That is why the great understand the word dharma itself to mean religion.

****




ATN Jewellery
Finest quality 22ct. Gold &
Diamond Jewellery
சகலவிதமான அமைப்புகள் கொண்ட
புதுப்புது நகைகளை மலிவாகவும்
தரமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
Tel: 020 8521 9767
Fax: 020 8521 1281
ATN Jewellery
37 Palmerston Road, Walthamstow
London E17 6PR
Tel: 020 8521 9767 Fax: 020 8521 1281


மதுரா
Fancy & Textiles Mart.
* முலாம் பூசிய ஆபரணங்கள்
* பரிசுப் பொருட்கள்
* கொண்டாட்டங்களுக்குத் தேவையான சோடினைப் பொருட்கள்
* சிப்பியில் செதுக்கிய அழகு சாதனப் பொருட்கள்
* இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட சுவரலங்காரப் பொருட்கள்
* பூசைக்குத் தேவையான அனைத்துப் பொருட்கள்
* இன்னும் பல...
Mathura Fancy & Textiles Mart.
45 London Road, Tooting, SW17 9JR.
Tel: 020 8640 0111

# K.R.K. FOOD & WINE

## Wholesales & Retails

திறந்திருக்கும் நேரம்
காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை



உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பழவகைகள்,
சகலவிதமான உடன் மரக்கறிவகைகள், கடலுணவுப் பொருட்கள்,
மற்றும் அனைத்து மளிகைப் பொருட்களுக்கும்...
உங்கள் நுகர்வுத் தேவைகள் அனைத்தையும்
ஒரே இடத்தில் தெரிவு செய்து கொள்ள உங்கள் நினைவில் என்றும் இருக்கவேண்டிய இடம்

## K.R.K Food & Wine

தரத்திற்கும் சுவைக்கும் என்றுமே முதன்மை பெறுவது

**K.R.K Food & Wine**

120, Horns Road, Newbury Park, Essex IG2 6BL.

Tel: 020 8518 9092

உங்கள் வதிவிடம் அருகே ஒரு புதிய தமிழர் அங்காடி.
சகல விதமான சர்வதேச தொலைபேசி அட்டைகள், ஓடியோ, வீடியோ சீடிக்கள்
என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

# KUMARANS

KUMARANS

# குமரன்ஸ்

**Imports & Exports, News Agent, Off Licence & Grocery**

உங்களுக்கு அன்றாடம் தேவையான

**லீலா தயாரிப்புகளை**

மொத்த விற்பனை

விலைக்கு

தொகையாக வாங்கிச்

சிக்கனமடையுங்கள்

FREE PARKING AVAILABLE FOR OUR CUSTOMERS

Kumarans Limited
142 Hoe Street
Walthamstow
London E17 4QR

Tel: 020 8521 4955
Fax: 020 8521 5655
020 8521 9482

136 Hoe Street
Walthamstow
London E17 4QR

Tel: 020 8520 5960
Fax: 020 8530 5655

144 Hoe Street
Walthamstow
London E17 4QR

Tel: 020 8521 4411
Fax: 020 8530 5655

KUMARANS

Branches at:

69 Holloway Road
London N7

Tel: 020 8609 1912
Fax: 020 8609 0501

243 Hoe Street
Walthamstow
London E17 4QR

Tel: 020 8520 6210
Fax: 020 8520 6366

532-536 Forest Street
Walthamstow
London E17

Tel: 020 8925 7720
Fax: 020 8925 7721

**லீலா தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்**


Meera Gold Smith
செய்கூலி மட்டும்
கொடுத்து
பழைய தங்கத்தில்
புத்தம்புது நகைகளை
செய்து கொள்ளவும்,
உயர்தர அதிஸ்ட
நவரத்தினக் கற்களை
நியாய விலையில்
பெற்றுக் கொள்ளவும்
ரூட்டிங்கில் நீங்கள்
நாடவேண்டிய இடம்
பிரமாண்டமான காட்சி
அறைகள் இல்லை
பிரமிக்க வைக்கும்
கலைவண்ணம் வடிக்கும்
நகைச் சிற்பிகளின்
கலைக்கூடம்.
தங்கம் வாங்கும் போது
தங்கம் தெரிந்தவர்களிடம்
வாங்குங்கள்.
896, Garrat Lane, Tooting, London SW17 0NB.
Tel: 020 8767 2616, Mobile: 0795 894 8685


Blue Moon Mini Market
Formally AJ Mini Market
புதிய பொலிவுடன் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கும் பழைய
அருள்தாஸ் கடைஅனைவரையும் அன்புடன் வரேவற்கிறது
எம்மிடம் புதிய ரகச் சேலைகள்,சுடிதார்கள், சோளிகள், திருமணத்திற்கு
தேவையான உடைகள், தலைப்பாகை மற்றும் பல சமையலுக்குத்
தேவையான பாத்திரங்கள், சுவாமிப்படங்கள், கோவிலுக்கு தேவையான
பொருள்கள், முன்னணி எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுவர்களுக்கான
ஆரம்ப புத்தகங்கள்,சஞ்சிகைகள்
அத்துடன்
தமிழ், ஹிந்தி சிங்கள, ஆங்கில திரைப்படங்கள் மற்றும்
DVD,VCDS, AUDIO, CD க்கள் என்பனவற்றுடன்
தினமும் பசுமையான மரக்கறிவகைகள், அனைத்து ரக அரிசி வகைகள் கடலுணவுப் பொருட்கள் முதலியன
பெற்றுக் கொள்ளலாம் லூசியம் கவுன்சில் மற்றும், சொடெஸ்கோ வவுச்சர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
TEL:020 8265 0629
30 Lompit Hill Lewisham SE13 7SW



துணையை அடைதல் அவசியம். திருமணமுறைகள் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என எண்வகைப்படும். இவற்றுள் பிரசாபத்தியமே சைவமக்கள் கைக்கொள்ளும் திருமணமுறைமையாகும்.

# சைவக்கிரியைகள்

ஏன் என்றோ எப்படி என்றோ அறியாமலும் அறியமுயற்சிக்காமலும் நாம் பல சடங்குகளைச் செய்கின்றோம். இதனால் எமது பிள்ளைகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறுகிறோம். இந் நிலையை இயன்ற வரை தவிர்க்குமுகமாக இக்கட்டுரை வெளியாகிறது!

## கிரியைகளின் அவசியம்

கிரியை என்பது செய்கை எனப்பொருள்படும். புறச்செயல்களாலே நடத்தும் இறை வழிபாடுகளுள்ளே கிரியைகள் அடங்கும். சைவமகன் ஒருவன் பிறந்த காலந்தொட்டுக் காலமாகும்வரை அவனுடைய வாழ்க்கையில் இடம்பெறும் சைவக்கிரியைகள் பலவாகும். இவற்றினை முறைமையுணர்ந்து செய்வது சைவமக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். வேதசிவாகமங்கள் சைவக்கிரியைகளின் விதிகளையும், விளக்கங்களையும் தருகின்றன. இக்கிரியைகளுள் திருமணக்கிரியை பற்றி இவ்விதழில் சிறிது நோக்குவோம்.

## திருமணம்

திருமணமாவது மணமகன், மணமகள் ஆகிய இருவரையும் இல்வாழ்விலே புகுவிக்கும் ஒரு மங்கல நிகழ்ச்சியாகும். ஒருவன் **அறம், பொருள், இன்பம், வீடு** ஆகிய நான்கு பயன்களையும் பெறுதற்காக ஒரு வாழ்க்கைத் துணையை அடைதல் அவசியம்.

### நோக்கம்

பிள்ளைக்கோ,பெண்ணுக்கோ திருமணப்பருவம் வந்ததும் திருமணஞ்செய்து வைத்தல் பெற்றோரின் கடமைகளுள் ஒன்றாகும். இந்நிலையிற் பெற்றோர் தம் குடும்பத்துக்கு ஏற்ற துணையைத் தம் மகனுக்கோ மகளுக்கோ நாடுவர். திருமணம் நிச்சயம் செய்வதற்குச் **சாதகப் பொருத்தம்** பார்த்தல் முதல் நிகழ்ச்சியாகும். இரு பகுதியினரும் தனித்தோ சேர்ந்தோ ஒரு சோதிடரிடஞ் சென்று இரு சாதகங்களையும் சேர்த்துப் பொருத்தம் பார்ப்பார்கள். பொருத்தம் பார்க்கும்போது கிரகம்,நட்சத்திரம்,கணம்,மாகேந்திரம், ஸ்திரீதீர்க்கம், யோனி, இராசி. இராசியதிபதி, வசியம், இரச்சு, வேதை, விருக்ஷம், ஆயுள், புத்திரப்பேறு ஆகிய இவற்றுடன் சேர்த்துப் பார்த்தல் முறையாம். இதில் அரைப்பங்கு பொருந்தினால் உத்தமம் என்றும், காற்பங்கு பொருந்தினால் மத்திமம் என்றும் கணக்கிடுவர். உத்தமம், மத்திமம் என்றால் பொருத்தமென ஏற்றுக்கொள்வர். இதன் பின்னர் திருமணம் நிச்சயிக்கப் பெண்வீட்டார் பிள்ளைவீட்டுக்கும், பிள்ளைவீட்டார் பெண்வீட்டுக்கும் கொடுக்கும் பொருள் பற்றி ஆராய்வர். ஆராய்ந்தபின் நிச்சயதாம்பூலத்திற்கு நாள் வைப்பர். இவையே திருமண ஆரம்ப நிகழ்ச்சிகளாகும். இவற்றின் பின் தம் குலதெய்வத்தை வேண்டி மஞ்சள், குங்குமம் முதலான மங்கலப்பொருட்களுடன் திருமண விழாவினை ஆரம்பிப்பர்.

## நிச்சயதாம்பூலம்

நிச்சயதாம்பூலமாவது பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று பெண்ணின் தாய் தந்தையர் ஒரு தாம்பாளத்தில் மங்கலப்பொருட்களான வெற்றிலை, பாக்கு, குங்குமம், மஞ்சள், பூ, சந்தனம், பழங்கள், பட்டு, பொன் ஆகியவற்றைப் பெரியோர்கள் முன்னிலையில் வைத்துத் தமது மகளின் பெயரைச்சொல்லித் தங்கள் மகனுக்குத் திருமணம் செய்து தருவதாகக் கொடுத்து மகிழ்வர். இதேபோன்று திருமணத்துக்கு இசைந்ததன் அறிகுறியாகப் பிள்ளைவீட்டாரும் கொடுத்து மகிழ்வர். இதனை நிச்சயதாம்பூலம் பரிமாறல் என அழைப்பர்.

## திருமண நிகழ்ச்சி

மணமக்களின் நன்மையை முன்னிட்டு அவர்களுக்குப் பொருத்தமான நன்னாளிலே திருமணம் நடைபெற ஏற்பாடு செய்வர். திருமண விழாவுக்குச் சில நாள்களுக்கு முன் பிள்ளை வீட்டிலே தாலிக்குப் **பொன்னுருக்குதலும்,** பெண்வீட்டிற் **கன்னிக்கால்** நடுதலும் ஆரம்பநிகழ்ச்சியாக நடைபெறும். வயது முதிர்ந்த பொற்கொல்லர் ஒருவர் பிள்ளைவீட்டுக்கு வந்து சமயாசாரப்படி பொன் உருக்குவார். இப்பொன்னையே தாலியாகச் செய்து மஞ்சட்கயிற்றிலோ பொற்கொடியிலோ சேர்த்து மண அவையிலே மணமகன் மணமகளுக்கு அணிவார்.

பெண்வீட்டில் இதேசுபதினத்தில்,கன்னிக்கால் நாட்டப்படும். இதனைப்பந்தற்கால் நாட்டுதல் என அழைப்பர். முள்முருக்கைத் தடியிற் (கல்யாண முருக்கு) பட்டுச்சாத்திப் பொன்சங்கிலியுடன் ஒரு பெரியவர் அதனை நாட்டுவார். நாட்டும்போது சில்லறைப்பணமும் நவதானியமும் கிடங்கில் இடல் வேண்டும்.

## மணப்பந்தல்

கன்னிக்கால் நாட்டியதும் திருமணப்பந்தல் போடப்படும். கிழக்குப்பக்கமாக மணமேடை அமைய அப்பந்தல் அமைக்கப்படும். மாசுமறுவற்ற முறையில் வெள்ளைகட்டி, மகரதோரணம், மாவிலை, மலர்மாலைகள் இவற்றால் மணப்பந்தல் அலங்கரிக்கப்படும். மணமக்கள் அமர்ந்து மணநிகழ்ச்சிகள் இடம்பெறப் பந்தரிலே மணவறையின் முன்பு மணநிகழ்ச்சிகள் இடம்பெறுவதற்காக விசாலமான இடமும் அமைக்கப்படும். அவ்விடத்தைச் சுத்தஞ்செய்து, நடுவில் அரசாணிக்கால் வைத்து மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஆயிரம் கண்ணுள்ள இந்திரனைக் குறிப்பதற்காகவே முள் மரம் அரசாணிக் காலாக வைக்கப்படுகிறது. கல்லாகிப்போன அகலிகையை நினைவுபடுத்த அம்மியும் வைக்கப்பட்டிருக்கும்.

## திருமணச்சடங்கு

திருமணச்சடங்கன்று மணமகனுக்கு மங்கல நீராட்டுவர். பிரமசாரி என்ற நிலை நீங்கும் நிகழ்ச்சியைக்குறிக்கும் இந்நீராட்டு விழாவில் **பால் அறுகும் மஞ்சளும்** சேர்த்து மணமகனின் தலையில் வைத்துப் பெரியோர்கள் வாழ்த்துவர். (அறுகம்புல்லின் வேர் கிளைத்து மண்ணில் வெகுதூரம் பரவும். ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி ....... என்ற வாழ்த்து இங்கு நோக்கத்தக்கது) பின்னர், மணமகன் நீராடியபின் திருமணக்கோலத்துக்குரிய ஆடை அணிந்தபின் கடுக்கன் பூணல், சிகை அலங்கரித்தல்,திலகமிடல், ஆராத்தி எடுத்தல் முதலியவை நிகழும். இதேபோன்று மணமகள் வீட்டில் மங்கல நீராட்டுக்குப்பின் உருதுசாந்தி அல்லது **சாமர்த்தியச் சடங்கு** நிகழும். இவை சிறப்புற நிகழ்ந்தபின்னரே மணமக்கள் திருமணச்சடங்குக்குச் செல்வர்.

குலகுருவும்,முதியவரும்,பெரியவருமான ஓர் அந்தணர் திருமணச்சடங்கினை நடாத்துவார். குறிப்பிட்ட மங்கல ஓரைக்கு முன்னரே மணவறைக்கு வந்து சேரவேண்டிய ஒழுங்கு களைக் கவனிப்பார்.

மங்கலவாத்தியம் முழங்க மணமக்கள் மணவறையை வந்து சேர்ந்ததும் சங்கற்பம்,

விக்கினேசுர பூசை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ்வியம், காப்புக்கட்டுதல், முளையிடுதல், சிவகும்பபூசை, நவக்கிரகபூசை, சிவாக்கினி காரியம், நாத்திமுகம் முதலான கிரியைகளும் இவற்றை ஒட்டிக் கன்னிகாதானம்,மங்கல நாண்பூட்டல், மதுபர்க்கமருந்துதல், பசுக்கன்று தரிசனம்,அம்மி மிதித்தல், தீவலம் வருதல், ஏழடி வைத்தல்,அருந்ததிகாட்டல், பூரண ஆகுதியோடு நல்வாழ்த்துக்கூறலுடன் சடங்கு இனிது நிறைவுறும்.

## சடங்கின் சிறப்பியல்புகள்

**சங்கற்பம் –** செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்னகாலத்திலே, இன்ன இடத்திலே இன்ன நோக்கமாக என்பது சங்கற்ப வாக்கியத்தின் பொருளாம். சிருட்டித்தொடக்கத்தில் இருந்து அன்று வரையும் உள்ள காலம் இதிலே குறிக்கப்படுதலாலே காலத்தின் பெருமையும், தற்காலவாழ்வின் சிறுமையும், ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.

## சங்கற்ப முறை

ஆண்கள் பவித்திரமணிந்த வலது கையிலே தருப்பை,பூ,அரிசி முதலியவற்றை வைத்துக்கொண்டு தலையில் சிவ சிவ என்று மூன்று முறைகுட்டி விநாயகரைத் தியானித்து,வலது கையை மேலாகவும் இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது முழந்தாளில் வைத்தல். இதேபோன்று பெண்கள் இடது முழந்தாளில் வைத்தல்.

## சங்கற்ப வாக்கியத்தின் கருத்து

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரம்மாவின் இரண்டாவது பராத்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ்வத மந்வந்திரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில், கலியுகத்தின் முற்பகுதியில் சம்புத் துவீபத்தில் பாரத வருசத்தில் பரதக்கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே (இடத்தின் பெயர்) வருஷம்------ இன்ன அயனம்------- மாதத்தில்------பட்சத்தில்------திதியில்------நட்டசத்திரத்தில்----- கிழமையில்------ யோகத்தில்------ நன்மையான கரணம் உள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இப்புண்ணிய தினத்தில்---------- நோக்கமாகக் கிரியை செய்யப்போகின்றேன்.

இக்கிரியைகள் மங்கலகரமான கிரியைகள் ஆரம்பிக்கு முன் செய்யப்படல்வேண்டும்.

**அடுத்த இதழில்** விக்கினேஸ்வர பூசை, கும்பம் வைத்தல், மாங்கல்ய தாரணம், ஏழடிவைத்தல் இன்னும் பலவற்றின் விளக்கத்தை விபரமாகப் பார்ப்போம். ✡


கலசம்
KALASAM

இலவச காலாண்டிதழ்

அன்புடையீர் தங்களின் கலச காலாண்டிதழை தபால்மூலம் பெற்றுக் கொள்வதற்காக இத்துடன் ........................பவுண்களுக்கான காசோலையை இணைத்துள்ளேன்.

பெயர்: ....................................................................

முகவரி: ....................................................................
....................................................................
....................................................................

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Kalasam@hotmail.com

இணைக்கவேண்டிய தொகை £5 (U.K);£10 (Rest of the world)( இரு வருடங்களுக்கு)

# பெரியபுராணத்ததின் உட்பொருள்

**-மு.சிவராசா-**

திருத்தொண்டர் பெரியபுராணத்தில் போற்றப்படும் நாயன்மார் பலரின் செயல்கள் நம்புதற்கு அரியனவாக இருக்கின்றன. இறைவன் அருளும் முறை இயல்பாக இல்லையே என்கிறோம். பாலாலும், பஞ்சாமிர்தத்தாலும், மூர்த்திக்கு அபிஷேகமாகும்போது இவற்றை வீணாக்கு கிறார்களே என ஒரு சாரார் எண்ணுவர். அந்தப் பாலினுள்ளும், பஞ்சாமிர்தத்துள்ளும் இன்றும் கடவுளைக் காண்கின்றனர் பக்தர்கள். **தமக்குக் கிடைக்கும் அரியபொருளைத் தாம் அனுபவிப்பதிலும் தமது அன்புக்குரியவர்களுக்குக் கொடுத்து அவர்கள் அனுபவிப்பதைப் பார்த்து மகிழ்வோர் பலர்.** தமது பிள்ளை ஆற்றில் விழுந்துவிட்டால், தமது உயிரையும் பொருட்படுத்தாது ஆற்றில் குதிக்கும் தாய் தந்தையரை நாம் அறியோமா? பிள்ளையிடம் வைத்துள்ள அன்பைக் காட்டிலும் அதிக அன்பை ஆண்டவனிடம் வைத்திருப்பதில் என்ன தவறு? இறைவனையும் அவன் அடியவரையும் வேறுபடுத்திப் பாராத நாயன்மார்களின் வரலாறு களையும் அவற்றுள் பொதிந்துள்ள உட்கருத்துக்களையும் 'கலசம்' இதழில் தொடர்ச்சியாகத்தருவதில் பெருமையடைகிறோம்.

# இயற்பகை நாயனார்

இவர் பூம்புகார் நகரில் ஒரு வணிகர். உலக இயல்புக்கு மாறான செயலை உடையவராதலால் இயற்பகையார் எனப் பெயர்பெற்றார். சிவனடியார்களைச் சிவனாகவே கொண்டு அவர்கள் கேட்பதெல்லாம் இல்லை என்னாது கொடுக்கும் வழமையுள்ளவர். இவரது தொண்டுள்ளத்தை உலகுக்குக் காட்ட இறைவன் திருவுள்ளம் பற்றினார். தூர்த்தனான சிவனடியார் ஒருவரின் வேடம்கொண்டு இவரிடம் வந்தார்.

வந்தவரை வணங்கி அவர் வேண்டுவது யாது என இயற்பகையார் கேட்டார். '''நான் கேட்பதைத் தர இசைவீராயின் கேட்கலாம்'' என அடியவர் தயங்கினார். தாங்கள் கேட்பது எதுவானாலும் என்னிடம் இருப்பதானால் நிச்சயம் தருவேன் என இவர் உறுதி கூறினார். உமது மனைவியை வேண்டி வந்தேன் என்றார் அடியவர். தன்னிடம் உள்ள பொருளையே அடியவர் கேட்டார் என்று மனமகிழ்வோடு இயற்பகையார் தம் மனைவியை அடியவரிடம் கொடுத்தார். வந்தவர் மீண்டும் இயற்பகையாரிடம் இன்னொன்று கேட்கின்றார். அப்பெண்ணைக் கொண்டு போகும்போது சுற்றமும் ஊராரும் எதிர்ப்பார்கள் என அஞ்சுவதாகவும் ஊர் எல்லைவரை தமக்குத் துணையாக வரவேண்டு மெனவும் அடியவர் கேட்டார். உடனேயே இசைந்த இயற்பகையார் எதிர்ப்பவர்களை விலக்க ஆயுதங்கள் ஏந்தித் துணையாகப் போனார்.

சுற்றத்தவர்கள் இவ்விழிசெயலைச் செய்த இயற்பகையைக் கோபித்து அடியவரைத் துன்புறுத்த ஆயத்தமானார்கள். அவர்களோடு சண்டைசெய்து பலரைக் கொல்ல,ஏனையோர் ஓடிப்பிழைத்தனர். ஊர் எல்லையில் அடியவர் இயற்பகை இனி மீளலாம் என்றார். அவ்வாறே இயற்பகை தம் மனைவியாயிருந்தவரைத் திரும்பியும் பாராது மீளுவாரானார்.

அவர் சிறிது தூரம் சென்றதும் அடியவர் "இயற்பகை முனிவா ஓலம்"என ஓலமிட்டார். 'இடர் செய்வார் இன்னும் உளரோ' என்றபடி திரும்பி ஓடிவந்த இயற்பகையார் மனைவியை மாத்திரம் கண்டார். சிவனடியார் மறைந்து விட்டார். இறைவன் திருக்காட்சி கொடுத்து இருவருக்கும் அருள் புரிந்தான்.

சிவனை உணர்ந்து இடையறாத பக்தி பூண்ட மெய்யடியார்களுக்கு உலகில் சிவனே

எப்பொருளினும் இனியவராவார். இவ்வாறானவர்கள் தம் மனைவி மக்களினும், பொன் பொருளினும் மிக இனியவர் சிவனே எனக் கொள்வர். பலநாள் பசியோடிருக்கும் தாய் தனக்குச் சிறிது உணவு கிடைத்தபோது அதைத் தான் உண்ணாமல் பசித்திருக்கும் தனது குழந்தைக்கு ஊட்டி மகிழ்வாள். அதேபோல சிவனிடத்து மிக்க அன்புள்ள மெய்யடியார்கள் தாம் ஒன்றை அனுபவித்தலினும் அதைச் சிவனே அனுபவிக்கக் கொடுத்து ஆனந்தம் கொள்வர். சிவனடியார்களைச் சிவன் எனவே கொள்ளும் பக்குவம் உடையவர்கள் மெய்யன்பர்கள்.

இயற்பகையாரின் மெய்யன்பை உலகோர் அறிந்துய்யும்படி சிவன் அடியவர் வேடத்தில் வந்து அவர் மனைவியை வேண்டினார். ஒருவருக்குத் தமது மனைவி(கணவன்) தான் உலகில் மிகமிக இனிய பொருள். அவ்வாறாக, தம் மனைவியையே மகிழ்ச்சியோடு உலகத்தவர் பழிப்புரையையும் நோக்காது கொடுத்தார். இவர் மனத்தைச் சிவபக்தியே விழுங்கிற்றென்பது துணிபு. சிவவேடத்தைக் கண்டபோது சிவன் எனவே கொள்ளுதலால் இவர் தம் வயத்தவர் அல்லர். அதி தீவிர பக்தியுள்ளவர்கள் அடியவர்களிடம் குற்றம், குணம் ஆராய்தல் இயலாது.

சிவனடியாரைக் காணின் சிவனையே நினைவேன் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகிறார்.

**"துணிப்படும் உடையும் சுண்ணவெண் ணீறும்**
**தோற்றமும் சிந்தித்துக் காணில்**
**மணிப்படு கண்டனை வாயினாற் கூறி**
**மனத்தினால் தொண்டனேன் நினைவேன்......"**

7-12-10

(எண்கள்- திருமுறை, பதிகம், பாடல் எண்களைக் குறிக்கும்)

***


Rani Fashions

ஈஸ்ட்காமில் தமிழர்களின் மாபெரும் புடைவைக் களஞ்சியம்.

Specialist in wedding sarees, Suites, Childrenswear

எங்களிடம் திருமணத்திற்கான சிறந்த கூறைச் சேலைகள், காஞ்சிபுரம், அபூர்வா, றங்கோலி, கோலம் மற்றும் பலரக சாறிகள், பிளவுஸ் துணிகள் சுடிதார், குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் Imitation Jewelleries Etc.
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும்.



Rani Fashions

302 High Street North, Manor Park,
London E12 6SA.

Tel: 020 8472 9970, Mobile: 0958 504 118

அருணகிரிநாதரின்

# கந்தர் அநுபூதி

## விளக்கியவர் கி. வா. ஜகந்நாதன்

## பகுதி–2

## பாடும் பணி

### சொற்கோயில்

**ஆடும் பரிவேல் அணிசே வல்எனப்**
**பாடும் பணியே பணியாய் அருள்வாய்**
**தேடும் கயமா முகனைச் செருவில்**
**சாடும் தனியா னைசகோ தரனே!**

இது கந்தர் அநுபூதியின் முதற்பாடல்.

கந்தர் அநுபூதி என்பது ஒருபெரிய சொற்கோயில். கற்கோயில்களில் இறைவனுடைய திருவுருவம் இருக்கும் கர்ப்பக் கிருகம் நடுவிடம். அதைச் சுற்றிப் பரிவார தேவதைகளின் திருக்கோயில்கள் இருக்கும். மக்கள் வந்து வழிபடும் மண்டபங்கள் இருக்கும். பலவகைச் சிற்பங்கள் பொறித்த தூண்கள் இருக்கும். கடவுள் பிம்பங்களோடு மக்களின் பலவகைக் கோலத்தைச் சித்தரிக்கும் உருவங்களையும் அந்தத் தூண்களிலே பார்க்கலாம். காமவிளையாடல் களின் காட்சிகளைக் கூடப் பொறித்திருப்பார்கள். பிரபஞ்சமே கோயிலாக உருக்கொண்டதோ என்னும்படி அங்குள்ள சிற்பங்கள் இருக்கும். அவற்றினூடே சென்று நடுவே வீற்றிருக்கும் இறைவனை வழிபடவேண்டும்.

மதுரைத்திருக்கோயிலில் சென்று பாருங்கள். குரங்காட்டியின் சிற்பம் ஒருபால் இருக்கும். குறத்தியின் உருவம் ஒருபால் இருக்கும். காமனும் ரதியும் எதிரெதிரே நிற்பார்கள். முனிவர்கள் ஒரு பெண்ணணங்கைக் கண்டு காமமுற்றுத் தவம் குலைந்த நிலையில் இருப்பார்கள். கற்பகமும் காம தேனுவும் காட்சியளிக்கும். விநாயகர், முருகன், அம்மை, திருமால், ஆகிய தேவர்களும் அங்கங்கே பலபல கோலத்தில், சிற்ப உருவில் எழுந்தருளியிருப்பார்கள். பெரிய கோயிலுக்கு ஏற்றபடி விரிவான வடிவான வடிவங்களைப் பார்க்கலாம்.

கந்தர் அநுபூதியென்னும் சொற்கோயிலும் மிக விரிவானதுதான். இதில் ஐம்பத்தொரு பகுதிகள் இருக்கின்றன. பெரும்பாலான இடங்களில் முருகனுடைய திருக்கோலங்களைக் காணலாம். சில இடங்களில் மனிதனுடைய மருள் விளையாட்டை நினைப்பூட்டும்பரிவார தெய்வங்களும் உண்டு. இனி அந்தத் திருக்கோயிலுக்குள் செல்லலாம். அருணகிரிநாதர் வழிகாட்ட நாம் மெல்லச் சென்று இன்புறலாம்.

### மயில் வேல் சேவல்

இதோ கோயிலுக்குள் புகுந்துவிட்டோம். இறைவன் திருச்சந்நிதானத்தின் எதிரிலே நம் கண்ணுக்குத் தெரிகிறது மயில்வாகனம். எல்லாக்கோயில்களிலும் முதலில் நாம் பார்ப்பது வாகனந்தான். சிவபெருமான் திருக்கோயிலில் முதலில் நந்தியைத் தரிசித்துக் கொண்டே உள்ளே செல்லவேண்டும். திருக்கைலாயத்திலும் திருவாசலில் காவல்பூணும் அதிகார நந்தியை வணங்கிய பிறகே உள்ளே போக இயலுமாம். இங்கே முருகன் திருக்கோயிலில் அவனுடைய வாகனமாகிய மயில், ஆடும் பரி இருக்கிறது. அதை முதலில் அருணகிரிநாதப் பெருமான் காட்டுகிறார். "இதோபார், ஆடும்பரி. இதைக்கும்பிடு," என்கிறார். பிறகு அதன் அருகிலே நட்டிருக்கிற வேலைக்காட்டி, " இதையும் வணங்கு" என்கிறார். முருகப் பெருமான் திருக்கோயில்களிலும் துவஜஸ் தம்பத்துக்கு அருகே மயிலும் வேலும் இருக்கும். அந்த இரண்டையும் கண்டு களித்தவுடன் சற்றே மேலே பார்க்கச் சொல்கிறார். " அதோபார், ஆண்டவனுடைய வெற்றிக் கொடியாகிய சேவல்" என்று காட்டுகிறார். ஆடும் பரியையும் வேலையும் கோயிலுக்கு அழகு செய்கின்ற சேவலையும் தரிசித்து நிற்கிறோம்.

அவற்றைப் பார்த்துவிட்டு அவசர அவசரமாக உள்ளே போகக்கூடாது. முருகனுடைய வாகன–மாகிய மயில் எத்தனையோ உண்மைகளை விளக்கிக்கொண்டு நிற்கிறது. அவன் வேலோ ஞானத்தின் உருவம். அவனுடைய

வெற்றிக்கொடியும் அரிய உண்மையைப் புலப்படுத்துவது. இந்த மூன்றையும் அமைதியாக வழிபட்டு அவற்றின் புகழைப் பாடவேண்டும். இறைவன் திருக்கோயிலுக்குள்ளே புகாமலே இந்த மூன்றையும் பாடிக்கொண்டு வாழ்வையே கழித்து விடலாம். காட்டு மயிலையும் வேடன் வேலையும் குப்பைக்கோழியையுமா பாடப்போகிறோம்? முருகன் ஏறும் மயிலைப் பாடவேண்டுமானால் முருகனைப்பாடமல் இருக்கமுடியுமா? அந்த மயிலுக்குப் பெருமை வந்ததே முருகனால் தானே? அப்படியே வேலைப் பாடினால் அதைப்பிடிக்கும் முருகனையும் பாடத்தான்வேண்டும். சேவலின் புகழும் முருகன் புகழோடு இணைந்ததே. ஆகையால் மயிலையும், வேலையும், சேவலையும் பாடிக்கொண்டே இருப்பது என்றால், அந்த மூன்றோடும் சேர்த்து முருகனைப் பாடுவதாகவே முடியும். அருணகிரி நாதர் இந்த உண்மையை அறிந்தவர். முருகனை வேண்டுகிறவரைப் போல, நமக்கு வழி காட்டுகிறார். "முருகா, உன்னுடைய ஆடும் பரியையும், வேலையும், அணிசேவலையும், பாடும் வேலையையே என்வாழ்க்கைப் பணியாகத் திருவருள் புரிவாயாக" என்று வேண்டுகிறார்.

**"ஆடும் பரி வேல் அணி சேவல் எனப்**
**பாடும் பணியே பணியாய் அருள்வாய்."**

## ஆடும் பரி

கந்தர் அநுபூதி சிறிய பாட்டாகிய கலி விருத்தங்களால் ஆனது. உருவில் சிறியதானாலும் பொருட்செறிவு மிகவுடையது. இந்த நூல் மந்திர சாத்திரத்தைப் போலத் திட்பமும் நுட்பமும் உடையது. தன்னை ஓதுவாருக்கு வேண்டிய பொருளை அளிப்பது. பலர் இதைப் பாராயணம் செய்து தாம் விரும்பிய பயன்களைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு பாடலையும் பாரா–யணம் செய்வதால் ஒவ்வொரு பயன் உண்டென்று பெரியோர்கள் சொல்வதுண்டு. சௌந்தர்ய லஹரியில் உள்ள ஒவ்வொரு சுலோகத்துக்கும் ஒவ்வொரு சக்கரமும் பூசை செய்யும் முறையும் உண்டு. அவ்வாறே அநுபூதிப் பாடல் ஒவ்வொன்றுக்கும் உண்டென்று கூறுவர். இவை அநுபூதியின் சிறப்பைப் புலப்படுத்தும் செயல்கள்.

இந்த நூல் மந்திரம் போல விளங்குவது. மந்திரங்கள் யாவும் பிரணவத்தை முதலாக உடையவை. வேதமே ஓம் என்ற தொடக்கத்தை உடையது. திருஞானசம்பந்தப் பெருமான் எழுதும் மறையாகிய தேவாரத்தை அருளிச் செய்தார். அவர் வாக்கில் எழுந்த முதற் பதிகத்தின் தொடக்கத்தில் பிரணவம் அமைந்திருக்கிறது. தமிழ் மறையாதலால் அதைச் சற்றே மறைத்துக் கூறினார். பிரணவத்தின் அட்சரமான ஓங்காரத்தைத் தகர மெய்யோடு சார்த்தி, "தோ" என்று எடுத்தார். "தோடுடைய செவியன்" என்று தொடங்குகிறது அந்தத் திருப்பாட்டு.

**"எல்லையிலா மறைமுதல்மெய்**
**யுடனெடுத்த எழுதுமறை"**

என்று சேக்கிழார் சொல்கிறார். எல்லையற்ற மறையில் முதலாக உள்ள பிரணவ ஒலியைத் தமிழில் ஒரு மெய்யோடு சார்த்தித் தொடங்கிய எழுதும் "வேதமாகிய தேவாரம்" என்பது அதன் பொருள்.

பிரணவத்தைத் தமிழில் எடுத்தாளும் போது மறைத்து, நுனித்துணர்வாருக்குப் புலப்படும் படி அமைக்கவேண்டும் என்ற நியதியைத் திருஞானசம்பந்தர் காட்டினார். அப்பெருமானை முருகப்பெருமானது திருவவதாரமாகப் போற்றும் அன்புடைய அருணகிரிநாதர் கந்தர் அநுபூதியின் ஆரம்பத்தில் பிரணவத்தை வைக்க எண்ணினார். சம்பந்தரை அடியொற்றி அதனை நுட்பமாகக் காணும்படி பாடி வைத்தார். ஆனால் அவர் செய்தவாறு செய்யாமல் வேறு வகையில் செய்தார். எவ்வாறு என்பதை அடுத்த இதழில் காண்போம்.

**....... அடுத்த இதழில் தொடரும் ...**

# MAHABHARATHA

## Duryodhana's Plot

Right from the day the Pandavas entered Hastinapur, the Kauravas and especially Duryodhan disliked them intensely. He was also extremely jealous of the Pandavas for they had earned the love and respect of the entire kingdom. By some means or the other, he wanted to kill the Pandavas. Especially Bhima, But Duryodhana was fully aware that it would not be possible to kill Bhima through a wrestling match or with the mace. So Duryodhana had a sinister plot in mind.

One day, Duryodhana invited Pandavas for a holiday by the riverside. How could the Pandavas know Duryodhana's devious mind? Thinking about all the enjoyment, they readily agreed. And what a lot of fun it was! Horse-riding, boating, camp fire etc. On the ultimate day, Duryodhana had arranged for a royal feast. Bhima, who was a glutton could not resist the many mouth-watering delicacies and sweet dishes. Happily, he ate and he ate but did not know that a deadly poison had been mixed with his food.

In the night when others were fast asleep, the Kauravas tied the hands and legs of Bhima



RATNAM JEWELLERS
84, Burlington Road,New Malden, Surrey KT3 4NT
Tel: 020 8942 5670, Fax: 020 8408 1180
e-mail:ratnam84@aol.com

RL



and threw him into the river.

The next morning Yudhishitra found Bhima missing from his bed. Presuming that he had loitered away, the other Pandavas returned to palace along with Kauravas.

Bhima who had sunk to the bottom of the river had lost consciousness but was not dead. Seeing his inert body on the river bed, the king of Nagolak treated him against the poison. The king knew Duryodhana's evil intentions and hence warned Bhima to be careful about Duryodhana and his brothers. Bhima, on recovering his strength and power, thanked the residents of Nagolak for their hospitality and returned to Hastinapur.

Dharmaraj, Kunthi and the other Pandavas who were immensely worried about Bhima's strange disappearance were very happy to see him back. But not Dhuryodhan. He was baffled that Bhima had survived such a strong poison. This incident made Duryodhan all the more determined to kill the Pandavas, as he knew that they were the rightful heirs to the throne of Hastinapur.

Certain about Duryodhana's hatred and jealousy, Bhima warned his brothers and mother about the danger posed by the Kauravas.

It was under these circumstances that Duryodhana met Karna.

*********

## Dharma


Keep the mind free from evil thoughts. This is the whole Dharma. The rest is only of the nature of sound and show.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற** —திருக்குறள்

The key to purity of action is purity of thought.The attainment of a mind free from evil thoughts is the aim of a religious life and this is a silent process. External observances are sound and show.

RATNAM JEWELLERS , New Malden 020 89425670


# The story of Murugan




**1. The Kantha Puraanam,** or Tamil version of the Skanda Puraana, was written by Kachiappa Sivaachaaryar of Kumara Kottam at Kanchipuram. According to the account of Kachiappar, each day he would write his inspired account of the career of Lord Murugan or Skanda, and in the evening deposit his day's work in the moolasthanam of Lord Murugan at Kumara Kottam.

Each night, miraculously, the Lord Himself would modify Kachiappa's manuscript with His own corrections. Hence, the Kantha Puraanam is considered to be the absolutely authoritative account of Lord Murugan's career bearing the seal of approval of none other than the Lord Himself.


The original Kantha Puraanam was intended to be recited aloud in Tamil to audiences who were already well acquainted with the marvelous career of Lord Murugan. This abridged, illustrated Kantha Puraanam is intended to be seen and read by devotees young and old who live near or far from the sacred places mentioned in this puraanam. May all obtain the grace of Lord Murugan merely by beholding this sacred account



**2. Once in the Himalayas,** Parvati prayed to Lord Siva to help her to take a new birth so that the name of Dakshayani, daughter of Daksha, would be removed. As per her request the Lord ordered her to become a child of Himavaan, the King of the Hills. Parvati became the child of Himavaan and at the age of five she started praying to Lord Siva.

Surapadman the asura was ruling the three worlds and was troubling the devas and torturing them. The devas went to Lord Siva and requested him to help them. Siva promised them that he would make an end to Surapadma's life by creating a son of his own.

Siva created six flames from each of his faces. Due to the terrific heat produced from the light the devas all fled. Parvati also could not resist the heat and ran away. Vaayu collected all the six sparks and gave them to Agni the fire god as he could not bear the heat. Agni gave them to River Ganga and finally Ganga surrendered the six sparks into Saravana Poikai, a marshy pond in Himalaya.



**3. With** a bright body, six faces and twelve arms, **Lord Muruga** appeared on a red lotus.


Six Kaarthikai maidens discovered the six baby boys as per the order of Lord Vishnu. Each took one to herself to nurse


RATNAM JEWELLERS , New Malden 020 89425670

**4.From** the chilambu (anklet) worn by Parvati nine saktis were produced and with the help of Lord Siva these saktis were transformed into nine brothers of Lord Murugan. Veerabahu was one of them.

Lord Siva went to Saravana Poikai with Parvati, who embraced Lord Murugan, nursed him with her milk and brought him before Lord Siva.

Siva took Murugan in his arms and made Murugan sit with him and Parvati. Brahma, Vishnu and Indra were pleased and showered flowers upon Lord Murugan.





**5.The Kaarithikai** maidens prayed to Lord Siva. Siva blessed them and said, "Since my son was brought up by you, those who pray to Lord Murugan on Karttikai days will obtain all they want."

Narada Rishi performed puja and from the homam a big ram emerged and started killing people. Narada could not do anything about it, so he reported it to Siva and asked him to control the ram. Veerabahu controlled the ram and presented it to Lord Murugan as his riding vehicle.


**6.Once** Lord Brahma came to Mount Kailasa and walked in proudly. Lord Murugan called Brahma and asked him for the meaning of the pranava mantra 'OM'.

Brahma replied that "Om means Lord Brahma."

Angered, Murugan gave Brahma a knock on all four heads and kicked him out of the place. Murugan then threw Brahma in prison at Kanthavetpu. Then he himself took over the job of creation, the work done by Brahma. Lord Siva came to know about Brahma's imprisonment and sent Nandi to request Murugan to release Brahma. But Murugan ignored the request.

When Narada told Siva about Murugan's refusal to release Brahma, Siva laughed and he himself came to Lord Murugan, released Brahma and gave him back his work of Creation.

**Courtesy: www.murugan.org**



RATNAM JEWELLERS, New Malden 020 89425670

## மீண்டும் வருமா?

நல்லை நாதனின்
நல்லூர் திருவிழா
நாலு திசையிலும்
நம்மவர் சனக்கூட்டம்!

வெள்ளம் போல் பெருகி
வீதிதனை முட்டிநிற்கும்
உள்ளம் உருகி நிற்கும்
உயரிய பக்தர் கூட்டம்!

விடிவெள்ளி பூத்து நிற்கும்
வீதியிலே சனக்கூட்டம்
நல்லைக் கந்தன் நோக்கி
நகரும் அவர் கூட்டம்

அள்ளிப் பொழிந்து
அருளை வழங்கி நிற்கும்
நல்லை திருவிழா இனி
நம்மவர்க்கு எப்போது?

**லக்ஷிகா ஸ்ரீஸ்கந்தராஜா**
**ஆண்டு–8**
**இலண்டன் தமிழ் கல்வி நிலையம்**

## இந்து சமயம்

ஆதியும் அந்தமுமின்றி
உருவானது எங்கள் சமயம்
ஆண்டவன் நிழலாயிருந்து
நன்மைதரும் நல்ல சமயம்

கடவுளை நம்பியிருந்தால்
பயனளிக்கும் இந்த சமயம்
புறம் பேசிக் குறை கூறினால்
பிழை என்றுணரவைக்கும்
எங்கள் சமயம்

வரலாற்றை வளர்த்துவரும்
வள்ளல் அது இந்த சமயம்
பலலீலைகளைப்புரிந்து பின்
வரமளிக்கும் இந்துசமயம்!!

**நிதர்சனா ஜெகநாதன்**
**வகுப்பு–8**
**இலண்டன் தமிழ்க் கல்வி நிலையம்**

# நால்வர் தமிழ்க் கலைநிலையம்
# Manor Park

## பாரதியார்

**டொறினா ஆரோக்கியநாதர். – ஆரம்பப்பிரிவு**

பாரதியார் தமிழ் நாட்டிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம் எனும் கிராமத்தில் பிறந்தவர் ஆவார்.
இவர் ஒரு தலைசிறந்த தமிழ்க் கவிஞராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் விளங்கினார்.
இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவராவார். இவரது சுதந்திர வேட்கை கொண்ட பாடல்களும், மற்றும் குறிப்பாக காளி, சிறுவர் பாடல்களும் பெரிதும் கவிதை நயம் மிக்கவை. இவரை எல்லோரும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்று அழைப்பார்கள்.

## நான் வளர்க்கும் செல்லப்பிராணி நாய்

நாய் வீட்டைக் காக்கும்.
நாய் நன்றியுள்ள மிருகம்.
நாய்க்கு நான்கு கால்கள், இரண்டு செவிகள், இரண்டு கண்கள், வால் என்பன உண்டு.
நாய் லொள்,லொள் என்று குரைக்கும். நாய் குட்டி ஈனும்.

**வி. அயூரன் – ஆரம்பப்பிரிவு**

RATNAM JEWELLERS , New Malden 020 89425670

## நான் கண்ட கனவு

நான் எனது குடும்பத்துடன் கடற்கரைக்குப் போய் இருந்தேன். அங்கு நான் அக்காவுடன் கடற்கரையில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது நான் ஒரு கப்பலை அக்காவிற்கு காட்டி மகிழ்ந்திருக்கும் பொழுது அம்மா வந்து என்னை எழுப்பி விட்டா.

**சாகினி சிவகுமார்**

## இயூறோ

நான் இப்பொழுது "இயூறோ" என்பதைப்பற்றி விளங்கப்படுத்தப்போகிறேன். புது நாணயத்தைப் பதினைந்து ஐரோப்பிய நாடுகளில் பன்னிரண்டு நாடுகள் உபயோகப்படுத்துகிறார்கள். ஏறத்தாழ 300 மில்லியனைவிடக் கூடுதலான மக்கள் பழக்கப்படப் போகிறார்கள். "இயூறோ" காசு பன்னிரண்டு நாடுகளிற்குத் தை முதலாம் திகதியிலிருந்து புதுக் காசாக ஆக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து, டென்மார்க்,சுவிடன் ஆகிய நாடுகள் இதில் அடங்கவில்லை. காசு பெறுமதி எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியிருக்கும். ஆனால் ஒவ்வொரு நாடும் காசைத் தனிப்பட்ட முறையில் உருவகம் பண்ணியிருப்பார்கள். "இயூறோ" நாணயத்தைப் பாவிப்பதால் பயணிகள் ஐரோப்பிய நாடுகளிற்குப் பயணம் செய்யும்போது அவர்கள் சுலபமாகப் பாவிக்கலாம். காசை மாற்றத் தேவையில்லை. ஆனால்"இயூறோ" என்பது முழுமையான நல்ல விடயம் அல்ல. பன்னிரண்டு வயதுச் சிறுவன் கள்ளநோட்டுப்பாவித்து குற்றவாளியாயிருக்கிறான். பிரான்சில் பெண் ஒருவர் கோலோனிலிருந்து ருவாஸ்கோ பயணம் செய்யும் போது 50 " இயூறோ" கள்ள நோட்டைப் புகையிரத வண்டியில் கண்டுபிடித்திருக்கிறார். எப்படியென–ில் சில நோட்டுக்களில் பாதுகாப்பு எண்கள் இருக்கவில்லை. ஆனால் பிரித்தானிய மக்கள் அநேகமானோரிற்குப் பவுண்ஸ் பாவிப்பதை நிறுத்துவது விருப்பம் இல்லை. ஏனெனில் இயூறோவில் குறைந்தளவு கட்டுப்பாடுகள் இருக்குமென நினைக்கிறார்கள். முடிவுகள் உருவாக்கப்படுவது ஐரோப்பாவிற்கு நல்லது. ஆனால் பிரித்தானியாவிற்கு அல்ல. பிரதம மந்திரி ரொனிபிளேயர் தனது உரையில் கூறியிருக்கிறார் பிரித்தானிய மக்கள் வாக்களிப்பு செய்ய வேண்டும் என்று. ஆகவே நீங்கள் எதற்கு வாக்களிப்பீர்கள்? இயூறோவிற்கா? அல்லது பவுண்ஸிற்கா?

**சுமேதா இராஜேந்திரன்.**

## தொலைக்காட்சி

தொலைக்காட்சி மூலம் நாங்கள் பல விடயங்களைப் பற்றி அறியலாம். அதில் சிறியவர்கள் தொடங்கி பெரியவர்கள் வரை பார்க்கத்தகுந்த பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தொலைக்காட்சி மூலம் எல்லா உலகசெய்திகளும் உடனுக்குடன் அறியலாம். இதில் நாடகம், படம், பகிடி என பலபொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதில் உள்ள நல்ல நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன்மூலம் அறிவை வளர்த்துக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்கள் பொருட்களை இதன்மூலம் விளம்பரம் செய்கிறார்கள். பல வகைத் தொலைக்காட்சிகள் உள்ளன. இதில் சிறிது பெரிது என பலவகை உண்டு.

**சாருணி சிவகுமார்**

## திருவிழா

திருவிழா தமிழ் மக்களுக்குச் சிறந்தநாள். திருவிழா கோவிலில் சிறப்பாக நடைபெறும். இந்த நாளில் சிறுவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். திருவிழா அன்று கோவிலை மிகவும் அழகாக அலங்காரம் செய்வார்கள்.

**மயூரி ஜெகநாதன் – வகுப்பு 4**

RATNAM JEWELLERS , New Malden 020 89425670

## கலசம் இதழ் 38 இல் வெளியான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதி எமக்கு அனுப்பியோர் விவரங்கள்:

**இலண்டன் தமிழ் நிலையம்**
**Wembley**

தக்ஷப்பிரியா பாலசுப்பிரமணியம்– ஆண்டு 8
லக்ஷிகா ஸ்ரீஸ்கந்தராஜா– ஆண்டு 8
நிதர்சனா ஜெகநாதன்–ஆண்டு 8
மயூரன் ஆனந்தராஜன்–ஆண்டு 8
சாருமதி சிவனேசன்–ஆண்டு 8
பிரகலை மாணிக்கவாசகன்–ஆண்டு 4
பரன் கிரிதரமோகன் –ஆண்டு 4

**ஊக்குவித்த ஆசிரியர்கள்:**

செல்வி.செல்வமணி வடிவேல்,
திருமதி. S. மகாலிங்கம்

**வட இலண்டன் தமிழ்ப் பாடசாலை**
**Walthamstow**

ஆர்த்தி பகீரதன்
வஜீரன் சிவநேசநாதன்
பிரயாகா சிவநேசநாதன்
தர்சிகா நந்தபாலன்
இளமைந்தன் இளஞ்சேய்
வானதி சுந்தரமூர்த்தி
சிந்து சர்வநாதன்

**ஊக்குவித்த ஆசிரியர்கள்:**

திருமதி.கல்பனா பகீரதன்,
திருமதி.புவனா செல்வநாதன்

**மற்றும்**

எஸ். அகிலேஸ்வரி – கொழும்பு 2

## விடை தாருங்கள் !!

இப்பகுதியில் கலசத்தின் இந்த இதழில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டுரைகளிலிருந்து 10 வினாக்கள் கேட்கப்படும். இவற்றிற்குச் சரியான விடை எழுதி அனுப்புவர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். இவர்களில் சை.மு.சங்கத்தின் மாத பூசை அன்று பொது மக்கள் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிஷ்டசாலிகள் மூவருக்குத் தலா 15 பவுண்கள் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

இதற்குப் **பெற்றோர் / ஆசிரியர்களின்** உதவி மிக அவசியமானதாகும்.

**1) சைவமுன்னேற்றச் சங்கம் ஈழத்தில் ஆதரவற்றவர்களுக்காக செயற்படுத்தும் இரண்டு திட்டங்கள் யாவை?**

**2) What are the four Purushaarthas called in Tamil**

**3) சங்கற்பம் என்றால் என்ன?**

**4) According to திருக்குறள் what is the whole Dharma?**

**5)Who wrote Kantha Puraanam?**

**6)What does the name Vinaayagar mean?**

**7)கீறிட்ட இடங்களை நிரப்புக.**
**"திருவுருவங்கள் பலவானாலும் --------------------"**

**8)What do we call the four types of Thothiram within Thirumurai 1-9?**

**9)Write the 1st line of the 1st hymn of the 1st Thirumurai?**

**10)நவராத்திரி எந்த மாதத்தில் கொண்டாடப்படும்?**




For the first time in British history, Her Majesty the Queen Elizabeth II visited a Hindu Temple on 6th June 2002. The Highgate Murugan Temple was chosen for this occasion.

The Queen removed her footwear before entering the temple in accordance with the hindu tradition.



The priests chanted vedic mantras and invoked the blessings of Lord Murugan.

**Please see related articles in Saivaneri from page 30**





# சைவ நெறிப்பாடங்கள்

-கந்தையா இராஜமனோகரன்-

இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்குவோர்: **விம்பிள்டன் ஸ்ரீ கணபதி ஆலயம், இலண்டன் சிவன்கோயில் Lewisham, ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயம் Stoneleigh, இலண்டன் கணபதி ஆலயம் Wembley, ஸ்ரீ.சிவஸ்கந்தகிரி ஆலயம் Croydon, இலண்டன் முருகன் கோயில் Eastham, திரு. மு. சிவராஜா.**

**அன்பான சைவ உள்ளங்களே,**

சைவத்தைச் சமயம் என்றும் மதம் என்றும் அழைப்பதிலும் பார்க்க நெறி என்று அழைப்பதே சாலப் பொருந்தும். வாழ்வியலோடு அத்தனைதூரம் இணைந்து நிற்பது எமது நெறியாகிய சைவம். சைவசித்தாந்தம் ஒரு மெய்ஞ்ஞானம். அது மூடநம்பிக்கை அல்ல. ஆனால், சித்தாந்தத்தை அறியாது இருக்கும்போது மூடநம்பிக்கைகள் எம்மை மூடிக்கொள்ளலாம். இதனைப் போக்கும் வழி ....... கல்வி மட்டுமே.

**சிறார்களுக்கான சைவநெறிக் கல்வியின் தேவை:**

நமது சொந்த இடங்களான ஈழம், தமிழ் நாடு போன்ற இடங்களிலே வாழும்போது எம்மிலே பலரும் முழுக்கமுழுக்க சைவச் சூழலிலேயே வாழ்ந்தோம். அவ்வாறான சூழலிலே சைவம் பற்றிய விளக்கங்கள் இல்லாமலே பலரும் சைவ-நெறியை ஒழுங்காகக் கடைப்பிடித்தோம். ஆனால், புலம்பெயர் சூழலிலே சைவராக வாழத்தொடங்கும் எமது பிள்ளைகளும் தொடர்ந்துவரவிருக்கும் எமது சந்ததியினரும் சைவநெறியிலே வாழ்வதற்கு, நெறிபற்றிய பூரணவிளக்கமும் தெளிவும் தேவை. பூரண தெளிவுபெற்ற போதே,

1) மூடத்தன்மைகளற்ற முறையிலும் போலிகளை நம்பாத வழியிலும் சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேரா வகையிலும் தம்நெறிகாக்கும் வல்லமை அவர்களுக்கு ஏற்படும்.

2) அவர்கள் தம்மைச் சைவரென்று இனங்காட்டுவதற்குரிய துணிவையும் பெருமையையும் பெறுவர்.

3) பற்பல சமய நெறிகளைச் சேர்ந்த கற்றவர்கள் கூடும் சபைகளிலே சரியானதும் ஆரோக்கியமானதுமான முறையிலே வாதப் பிரதிவாதஞ் செய்யவும் சரியான விளங்கங்களைத் தெளிவாகக் கொடுக்கவும் உரிய அறிவையும் ஆற்றலையும் அடைவர்.

4) பல்வேறு காரணங்களால் ஆங்காங்கே எழுப்பப்பட்ட சைவக் கோயில்களை உரிய முறையிலே தொடர்ந்து பேணுவதற்குப் பொருத்தமான அறிவைப் பெறுவர். கோயில்கள் எமது சமூகத்தின் பிள்ளைகளைப் போலமைந்தவை. எமது பிள்ளைகளை நல்லவர்களாகவும் வல்லவர் களாகவும் வளர்க்கின்றோம் அல்லவா? அதுபோலவே பிறந்துவிட்ட ஆலயங்களை உரியமுறையிலே பேணவேண்டும். அதற்குச் சைவர் யாவரும் தத்தமது பிள்ளைகளைச் சைவம் பற்றிய தெளிவு மிக்கவர்களாக வளர்க்க வேண்டும்.

**ஆலயங்களின் ஆதரவு:**

சைவநெறியைப் படிப்பிக்கும் இப்பணிக்கு எல்லா ஆலயங்களும் பூரண ஒத்துழைப்புக் கொடுப்பது மிக அவசியமானது. தற்போது ஆகியோர் உதவ முன்வந்துள்ளனர். மேலும் தமிழ்ப்பள்ளிகளும் தத்தம் பள்ளியின்


Merging Your Vision
With Our Creativity
Miicro Select
Total Web Development Solutions.
Network Solutions
Customised Software
Offshore Staffing
Video Editing
Tel: +44 (0) 20 8470 1500 Fax: +44 (0) 20 8470 9800
WWW.miicroselect.com e-mail: info@miicroselect.com


SELECT
Estates Lettings
SALES
LETTINGS
MAINTENANCE
MORTGAGES
Professional Service
Rent Guarantee Scheme
Quality Tenants
Competitive Sales Commission
Mortgages Arranged
288 High Street North, Manor Park, London, E12 6SA
Tel: 020 8470 1500 Fax: 020 8470 9800

சைவமாணவர்களுக்கு இவ்வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். கலசம் தற்போது தமிழ்ப்பள்ளிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. இதுவரை கிடைக்காத பாடசாலைகள் இதைப் பெறவிரும்பினால் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**கல்வி முறைமை:**

கலசம் இதழிலே சைவசித்தாந்தம், ஆலயங்களின் அமைப்பு, வழிபாட்டின் நோக்கம், வழிபாட்டின் முறைகள், பூசைகளின் விளக்கங்கள் போன்ற எல்லாவற்றையும் கற்றுத்தரவிருக்கின்றோம். இவை தொடர்ச்சியாக ஒவ்வொரு கலசத்திலும் வெளிவரும். இவ்வாறு வெளிவரும் பாடங்களை அடிப்படையாக வைத்துத் தேர்வும் (பரீட்சை), தேர்வின் தன்மையை விளக்குவதற்காகவும் நேரடி விளக்கங்கள் அளிப்பதற்காகவும் அறிவுப் பட்டறைகளும் (work shop) அனுமதி தரும் ஆலயங்கள், தமிழ்ப் பள்ளிகளில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவைபற்றிய விவரங்களைப் பின்னர் அறியத்தருவோம்.

பாடங்கள் கீழ்ப்பிரிவு,மேற்பிரிவு என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திட்டங்கள், விளக்கங்கள், தேர்வுகள் என்பன யாவும் தமிழிலே நடைபெறவேண்டுமென்பதே எமது ஆன்ம விருப்பம். ஆனாலும் ஏதோ விளங்காத காரணத்தினாலே தமிழைப்புகட்டாது பிழைவிட்ட பெற்றோரின் பிள்ளைகளையும் சேர்த்து இழுத்துச் செல்லவேண்டுமென்ற உண்மை நிலையை எம் மனத்திலே கொண்டு ஆங்கிலத்திலும் பாடங்கள், விளக்கங்கள், தேர்வுகள் என்பன நடைபெறும். இத்தேர்வுகள் வசதிகளைப் பொறுத்து ஐரோப்பா, ஸ்கன்டினேவிய நாடுகள் அனைத்திலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

எனவே எம்மினிய சைவப் பெற்றோரே, பிள்ளைகளே, இனிமேல் வரும் கலசங்களிலே வரவிருக்கும் பாடங்களைக் கவனித்துப் படித்து அறிவை விருத்தியாக்குங்கள். அவற்றைச் சேகரித்து வையுங்கள். மீட்டலிற்கு உதவும். கலசத்தில் வரும் பிற கட்டுரைகள் கூட அடிப்படைச் சமயஅறிவை விருத்தி செய்பவையாகவே அமையும்.

உங்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் இதனைத் தெரிவியுங்கள்.

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்!!

***


கலசம் இந்தப் புலம் பெயர் நாட்டில் வாழும் சைவமக்களுக்குச் செய்துவரும் அளப்பரிய சேவைகளுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

டாக்டர் வீ. பழனிவேல் F.D.S.R.C.S(Eng)

(பல்வைத்தியர்)

**127 GREEN GATE STREET**

**LONDON E 13 OBG**

**TEL: 0208 472 9429**

# Lord Vinaayakar



Lord Vinaayakar (விநாயகர்) the Hindu deity in a human form but with the head of an elephant - represents the power of the Supreme Being that removes obstacles and ensures success in human endeavours. **For this reason, Hindus worship Vinaayakar first before beginning any religious, spiritual or worldly activity.** In Hindu mythology, Lord Vinaayakar is the first son of Lord Sivan and the Divine Mother Parvathi. Their second son is Lord Murugan .

Vinaayakar means the one who has no leader himself. Vinaayakar is known by other names as well.

**Ganapathi** (கணபதி) -'Ganah' in Sanskrit means 'multitude'; 'pathi' means 'Lord'. Therefore Ganapathi means 'Lord of all beings'.
**Vigneshvarar**(விக்னேஸ்வரர்) - Remover of all obstacles.
**Gajaananan** (கஜானன்)– Elephant faced.

The form of Vinaayakar represents the supreme state of human perfection and the path to reach that state. The elephant head on a human body is meant to represent supreme wisdom. The trunk indicates the intellect, the faculty of discrimination which arises out of wisdom. The trunk of an elephant has the unique capacity of performing both gross and subtle activities. It can uproot a tree as well as pick up a needle from the ground.

At the feet of Lord Vinaayakar there is an abundance of food. It represents material wealth, power and prosperity. When a man follows high principles of living he achieves these material gains. He has them always at his command though he has an attitude of indifference towards them.

**Do you know** why Lord Vinaayakar has four arms? Why is there a rat looking at him? You will find the answers in the next issue of Kalasam!

Self test questions:

1)Why do Hindus worship Lord Ganapathi before beginning any activity?

2)State 4 names of Lord Ganapathi and their meanings.

3)What does the trunk of Lord Ganapathi indicate?

# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON
E12 6BT

TEL
020 8514 8188
FAX
020 8514 8303

## M. MARKANDAN. LL.B

All aspects of immigration matters from appeals to European court of Human Rights
All types of Conveyancing
Litigation
All courts Civil/ Criminal
Landlords/ Tenant matters
Matrimonial
Police Station advice
All D.S.S and housing benifit matters

**LEGAL AID**



# CHARTER SECURITY

## Job Opportunities

**CONTROLLER 24 hour Control Room, team of three, 168 rosta, role-call system. Candidates should have professional, calm, polite manner in order to deal with staff duties, cover assignments, mobile duties and assist Manager in smooth running of operations within the Control Room.**
**In accordance with our operating procedures and BS1 9001 accreditation.**
**Hourly rate £7.00 (inclusive bonus). 4Weeks annual leave.**

**MOBILE DRIVERS/ SECURITY GUARDS Required for our head office.**
**Rosta basis. Full clean driving licence. Must have good communication skills, professional calm manner and able to work with a team.**
**4 Weeks annual leave.**
**Above positions include day/ night/ weekend rosta. Must provide previous employment details for references.**
**Please call Mandy Howarth/ Clare Whitehead direct on 020 8507 7717 for details / interiews.**

**1st Floor Cambridge House Cambridge Road Barking Essex 1G11 8NR Tel: 020 8507 7717 Fax: 020 8507 7702**




கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் எல்லா உயிர்களிலும் அன்பு கொண்டவர். எங்கள் துன்பங்களை எல்லாம் நீக்க வல்லவர். நாங்களும் அவரிடம் அன்பு வைக்கவேண்டும். கடவுளிடம் நாம் வைக்கும் அன்பு பக்தி எனப்படும். அவரை நாம் சிவபெருமான் என்போம்.

சிவபெருமானை எம் கண்ணால் பார்க்க முடியாது. கண்ணால் பார்க்கமுடியாததால் காற்று இல்லை என்று சொல்லலாமா? அது போலவே சிவனும். அவர் எங்கும் நிறைந்தவர். அவரை நேரில் காண இயலாததால் வீட்டில் படத்திலும், கோயில்களில் சுவாமிஉருவங்களிலும் பார்த்து வணங்குகிறோம். நம்பிக்கையோடு சிவனை வணங்கினால் நாம் வேண்டுவது கிடைக்கும்

சிவனை வணங்குவோர் சைவ சமயத்தவர். நாங்கள் கடவுளை வழிபடும் முறையைப் பழகிக்கொள்வோம். காலையில் நித்திரை விட்டெழுந்து, முகம் கழுவியதும் சுவாமிப் படத்தின் முன் நிற்போம். நெற்றியில் திருநீறு அணிந்து ஒரு தோத்திரமாவது சொல்லிக்கும்பிடுவோம். மாலையிலும் அதேபோலத் தொழுவோம். ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாயினும் வீட்டில் உள்ளோர் எல்லோரும் கூடியிருந்து வழிபடுதல் நல்ல வழக்கம்.

இறைவனை வீட்டில் வழிபடுவதிலும் கோயிலில் வழிபடுவது மிகவும் சிறந்தது. கோயிலில் சுவாமியின் பலவேறு திருவுருவங்கள் இருக்கும். அங்கு விநாயகர், அம்பாள், முருகன், வைரவர், நடராசர், சண்டேசுரர் போன்ற திருவுருவங்களைக் காணலாம். மூலமூர்த்திக்கு முன்பாக நந்தியும் பலிபீடமும் இருக்கும். திருவுருவங்கள் பலவானலும் கடவுள் ஒருவரே. கோயில் வழிபடுவதற்கென ஒழுங்கு உண்டு. அங்கே அமைதியாகவும், மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யாமலும் நடந்துகொள்வது அவசியம். வீதியை வலமாகச் சுற்றிவந்து சுவாமிமுன்பு விழுந்து கும்பிடவேண்டும். ஐயர் செய்யும் பூசையைத்தரிசித்து விபூதி, பிரசாதம் பெற்று அணிந்து கொள்ளவேண்டும். தினந்தோறும் கோயிலுக்குப் போக இயலாதானால் விசேடநாட்களிலும், திருவிழா நாட்களிலுமாவது போகலாம்.

நாம் வீட்டிலும் கோயிலிலும் கடவுளைத் தவறாது வழிபட்டால் எல்லா நன்மைகளையும் அடைவோம்.

**பிள்ளைகளுக்கும் ஆசிரியர் / பெற்றோர்களுக்கும் இடையில் இந்த விடயம் பற்றிய கலந்துரையாடல்கள் அவசியம். இதற்கு உதவும் வகையில் இவ்வினாக்கள் வழங்கப்பட்டுள்ளன.**

**வினாக்கள்**

1)கடவுள் யாரிடம் அன்பு கொண்டவர்?
2)பக்தி என்றால் என்ன?
3)கடவுளை நாம் எதில் பார்க்கிறோம்?
4)சிவனை வணங்குவோர் யார்?
5)திருநீறு எப்போது அணியவேண்டும்?
6)கூட்டு வழிபாடு என்றால் என்ன?
7)இறைவனை எங்கே வழிபடுதல் சிறந்தது?
8)கோயிலில் காணும் திருவுருவங்கள் மூன்று கூறுக
9)கோயிலில் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?
10)கடவுளை வழிபடுவதன் பயன் என்ன?

****

aum nama sivaya

# Saivam - An Introduction

மேற்பிரிவு

Saivam is the religion that worships **Lord Siva.** Saivam is a very old religion in the Hindu family of religions and is very rich in its philosophies. With its vivid branches very well integrated into the root, it becomes the feast, oxygen and life of many philosophers. With the matured philosophies standing on the great vedantic and siddhantic strong bases it presents to its followers the great paths to the Blissful Supreme called Siva.

Saivam is one of the most followed discipline of **sanaathana tharma** in many of its forms. For most of the saivites, apart from the **Vedas** , the **Agamas** are the scriptures of importance. The Saivites worship the Supreme as **formless** symbol and through many **forms**, all leading to the Ultimate Attributeless Supreme.

# Panniru thirumuRai

## THIRUCHCHITAMBALAM

Panniru thirumurai is the collection of **twelve holy scriptures** written by 27 marvelous devotees in Tamil language. These are the highly respected devotional hymns of Tamil saivites. The philosophers who came in the later days like the **Santhaana kuravar** who wrote the **saiva sidhdhantha** texts and others like Thaayumaanavar and Raamalinga vallalaar have adored these scriptures and their authors in their works. This splendid luminance of the thirumurai hymns has been guiding the suffering masses from their darkness to the Supreme in Whose presence the sticky bonds **(paasam)** are driven off.

These thirumurai are for masses to elites, simple devotees to great yogis, for married people as well as for ascetic. Because they have all the elements the people of various states would look for. While the honey dipped words of thiruvaasakam is nothing but pure devotion and surrender, thirumandhiram is a marvelous text on the sophisticated concepts of yoga shastram. The thiruththaandakam of appar perumaan are very simple to pass rich concepts even to masses and there are some hymns from Sampanthar that dwells in the beauties of grammar and music. Thirumurai have the songs praying for good family and material life at the same time those of devotees like Pattinaththaar who praise the ascetic life against the married !

These 12 thirumurais are arranged in four catagories. They are **thoththiram** (stotram) (praise) which are the first nine thirumurais. **chaaththiram** (shaastram) (guidelines) which is the tenth thirumurai namely thirumanthiram. **prabhantham** (assorted) which is the eleventh thirumurai. (Becuase the songs in this are composed of various language constructs). **puraanam** (history) which is the twelth thirumurai.

Thoththiram consists of **Thevaaram** (thirumurai 1-7), **Thiruvaasagam** (thirumurai 8),

**Thiruvisaippaa** and **Thiruppallaandu** (thirumurai 9).

We should let these great beacons shower wisdom in our minds !!

**Let us learn the 1st hymn of the 1st thirumurai by St. Thirugnanasambanthar.**

திருப்பிரமபுரம்

பண் - நட்டபாடை

தோடுடைய செவியன் விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப் பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான் முனை நாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

### Five Deeds of Lord (கடவுளின் ஐந்தொழில்கள் )

Thodudaiya cheviyan vidaiyeri Or thuuven mathi chuudi
kaadudaiya chudalaip podipuusi en ullam kavar kalvan
edudaiya malaraan munainaaL panintheththa arulcheytha
peedudaiya piramaapuram meviya pemmaan ivananre.

**Meaning**:

The One with ear-ring, Riding the bull, Wearing a chaste-white moon, Smearing the ash of the cemetry, Thief Who steals my mind, Blessed when the lotus one (Brahma) worshiped in the past, the Lord of the majestic brahmapuram (Seerkaazhi), isn't This He ?

**Notes:**

**1**. This is the first song of the prodigy sambanthar. He showed the God and Goddess to his furious father who enquired about the milk dripping from Sambanthar's lips and sang this at the age of three. (For details see http://www.shaivam.org/nachamba.html)

**2**. All the pancha kritya - five deeds of the Lord are indicated in this hymn beautifully. thodudaiya cheviyan - creation, thuuvenmathi chuudi - protection, chudalaippodipuuchi - reduction (destruction), ullam kavar kaLvan (hiding), aruLcheydha (blessing).

Please visit: http://www.shaivism.org ✪

**Discussions between students and teachers/parents are ESSENTIAL to the understanding of these lessons.These questions are given to help such discussion:**

Self test questions:

1)In what main form do Saivaites worship God?
2)The devotional songs of how many devotees can be found in Panniru thirumurai?
3)What are the four categories within the panniru thirumurai?
4)Thirumurai 1 to 9 consist of four types of songs; What are they?
5)What are the 5 deeds of Lord?
6)When did Thiru gnanasambanthar sing Thodudaiya Sevian?
7)How many of the things mentioned in this song can you see in the picture in page 28 ?

# புண்ணியகாலங்கள்

ஒவ்வொரு மாதமும் ஒருசிலபுண்ணியகாலங்கள் வரும்.அக்காலங்களில் இறைவனை வழிபடுதல் சிறப்பானது. இப்போது **ஆடிமாதம்** பிறந்திருக்கிறது. பூமி தன்னைத் தானேசுற்றியும் அதேவேளை சூரியனையும் சுற்றிவருகிறது. அதனால் சூரியன் காலத்துக்குக்காலம் வெவ்வேறு நிலைகளில் காணப்படும். ஆடிமாதம் முதல் தெற்கு நோக்கி நகருவதாகத் தெரியும்.இது **தட்சண அயனம்** என்று சொல்லப்படும். ஆறுமாதங்களுக்குப் பின் சூரியன் வடக்குநோக்கி நகருவதாகத் தோன்றும்.தை மாதத்தில் அப்படித் தொடங்குவது **உத்தர அயனம்** ஆகும்.இவ்வாறு சூரியனின் நகர்வு மாறுடும் முதல் நாள்கள் புண்ணிய நாள்களாம். தை மாதப்பிறப்பின் போது **தைப்பொங்கல்** கொண்டாடுவோம். **ஆடிப் பிறப்பின்**போது ஆடிக்கூழ்,ஆடிக் கொழுக்கட்டை செய்து இறைவனுக்குப் படைத்து உறவினர்களோடு பகிர்ந்து கொள்ளுவோம். இந்த இரு நாட்களும் ஈழநாட்டுப் பாடசாலைகளுக்கு விடுதலைநாட்களாம்.

ஆடிப் பிறப்புக்கு நாளைவிடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.

என்று தங்கத்தாத்தா எனப் புகழ்பெற்ற சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார்.

மாதந்தோறும் வரும் பூரணை, அமாவாசை நாட்களும் புண்ணிய காலங்களே. **பூரணை** நாட்களில் இறந்த தம் தாயை நினைத்தம், **அமாவாசைத்** தினங்களில் இறந்த தம் தந்தையை நினைத்தும் விரதம் இருப்பது சைவமக்கள் கடமை.இவற்றுள் **சித்திரைப் பூரணையும்,ஆடி அமாவாசையும்** மிகமிக முக்கியமானவை.
**ஆவணி** மாதத்தில் வரும் **விநாயக சதுர்த்தி** புண்ணிய காலம்.
அமாவாசையின் பின்பு வரும் நாலாம் நாள் சதுர்த்தி நாளாம். ஆவணிச் சதுர்த்தி விநாயக வழிபாட்டிற்கு மிகவும் விசேடமானது. **ஆவணி ஞாயிற்றுக்கிழமை**களில் சூரியனை நினைந்து விரதம் இருப்பதும் பொங்கிப்படைப்பதும் நன்று.

அடுத்து வருவது **புரட்டாதி மாதம்.** கிரகங்களால் வரும் துன்பங்களிலிருந்து விடுபட இந்த மாதச் **சனிக்கிழமை**களில் விரதம் இருப்பதும்,நவக்கிரகங்கள் முன்பு அல்லது சனீஸ்வரன் முன்பு எள்ளெண்ணெய் விளக்கு எரிப்பதும் வழக்கம். புரட்டாதி மாதத்தில் வரும் **நவராத்திரி** சக்தி வழிபாட்டுக்கான மிகச்சிறந்த புண்ணிய காலம். நவராத்திரி ஒன்பது நாள். சக்தியைத் துர்க்கை,இலக்குமி,சரஸ்வதி நிலைகளில் மும்மூன்று நாட்கள் வழிபடுவோம். இவர்களை வழிபட்டால் முறையே **வீரம்,செல்வம்,கல்வி** என்பனவற்றை அடையலாம்.

**வினாக்கள்**

*1) கடவுளை எங்கே எப்போது வழிபடல் வேண்டும்?*
*2) தட்சண அயனம்—விளக்குக*
*3) உத்தராயண புண்ணிய காலத்தில் என்ன செய்வோம்?*
*4)ஆடிப்பிறப்பன்று இறைவனை வழிபடும் முறை யாது?*
*5)பூரணை நாள் என்றால் என்ன?*
*6)பெற்றாரை நினைந்து விரதமிருக்கும் முக்கிய நாட்கள் எவை?*
*7) விநாயகரை வணங்க மிகச்சிறந்த நாள் எது?*
*8) புரட்டாதிச் சனியில் என்ன செய்வோம்?*
*9)நவராத்திரி காலம் எது?*
*10) மூன்று சக்திகளையும் அவர்களால் நாம் அடையும் பலன்களையும் கூறுக*

Manufacturers & Installers of
Quality Double Glazing & Shop Fronts
General Building Work & Kitchen Fittings

PRIMA

# PRIMA WINDOWS



Double Glazing (Aluminium or UPVC) & Shop Fronts & Shutters at competitive prices. We also do General Building Work, including Extensions, Conversions & Grant Work.

**Contact us for a price to suit your budget!**

## Prima Windows Limited

**1-3 Shrewsbury Road,London E7**

**Tel: 020 8472 5553**

**Mobile: 07956 542717**

# ருசித்துப் பாருங்கள்.... Ruby's இன் சுவையை!

## தயிர் சாதம்

### தேவையான பொருள்கள்

பச்சரிசி – 200 g
பால் – 400 ml
மோர் அல்லது தயிர் –1 மேசைக் கரண்டி
உப்பு –அரைத்தேக்கரண்டி
நெய் –2 தேக்கரண்டி
கடுகு –அரைத்தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு –ஒரு தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் –3
பச்சை மிளகாய் –2
கட்டி பெருங்காயம்–1 மிளகு அளவு
கறிவேப்பிலை –2 கொத்து

### முன்னேற்பாடு

முதலில் சாதத்தைச் சிறிதளவு கூழ்ப் பதமாக சமைத்து வைத்துக் கொள்ளவும். பின்னர் இதனை ஒரு பாத்திரத்தில் இட்டு நன்றாக ஆற விடவும். இவ்வாறான பாத்திரம் எவர் சில்வர் பாத்திரமாக இருக்கலாம். பின்னர் ஒரு பாத்திரத்தில் பாலையூற்றி அதை அடுப்பிலேற்றி ஐந்து நிமிடங்கள் வரை காய்ச்சவும். பின்னர் இதனைச் சாதத்துடன் கலந்து விடவும். இந்தப் பால் சாதம் வெது வெதுப்பான சூடாக இருக்கும்போது அதன் நடுவில் ஒரு துவாரத்தைச் செய்து அதில் மோரையோ, தயிரையோ ஊற்றவும். பின்னர் இதனை அழுத்தமாக மூடித் தனியே எடுத்து ஒரு பக்கமாக வைத்துவிடவும். இவ்வேற்பாட்டை குறைந்தது எட்டுமணித்தியாலங்கள் முன்னதாக செய்யவும்.

### தயாரிப்பு முறை

இது தயிர்சாதமாக மாறியபின், ஒரு வாணலியை அடுப்பில் வைத்து சிறிதளவு நெய்யை ஊற்றி காய வைக்கவும். பின்னர் அதில் பெருங்காயத்தை இட்டு நன்றாகப் பொரிக்கவும். இதைத் தனியே எடுத்து வைத்து விட்டு அதில் கடுகு, காய்ந்த மிளகாய், உளுத்தம் பருப்பு ஆகியவற்றைப் போடவும். இவை எல்லாம் நன்றாகச் சிவந்து வரும் வேளையில் பொடிப் பொடியாக நறுக்கப்பட்ட பச்சை மிளகாய்களையும், கறிவேப்பிலையையும் அதில் சேர்த்து மிளகாய் வதங்கியவுடன், பொரித்து வைத்திருக்கும் பெருங்காயத்தை அதில் சேர்க்கவும். பின்னர் எல்லாவற்றையும் தயாரான தயிர்சாதத்துடன் சேர்க்கவும். இதற்குத் தொட்டுக் கொள்ள எந்த ஊறுகாயும் சுவையானதாக இருக்கும். இத்துடன் வாழைக் காய் வறுவலும் சுவையானதே!




# ஐயம் தெளிவோம்

**நான் என்ற அகந்தை நீங்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதை நானே செய்கிறேன் என்ற கர்வம் இருக்கக்கூடாது என்கிறார்கள். ஆனால் இப்படி ஓர் உணர்வு (EGO) இல்லையானால் மனிதனால் சாதனைகள் புரிய முடியாமல் போய்விடுமே? அப்புறம் உலகம் எப்படி முன்னேற முடியும்? சாதாரண குடும்பஸ்தன் இந்த நிலையை அடைவது எப்படி?**

இதை நான்தான் செய்கிறேன் என்ற நினைப்பு இருந்தாலொழிய ஒரு காரியத்தில் முனைந்து ஈடுபட முடியாது என்பது தவறு. இது என் திறமையினால் கிடைத்தது என்று எண்ணிக் கொள்ளாவிட்டால் வாழ்க்கையில் வெற்றி உறுதிப்படாது என்று நினைப்பதும் சரியல்ல. ஒரு வங்கியில் ஊழியர் நிறையப் பணத்தை வைத்துக்கொண்டு பொறுப்பாக வேலைசெய்கிறார். ஆனால் ஒரு நிமிடம்கூட அவர் அந்தப் பணத்தைச் சொந்தம் கொண்டாடுவதில்லை. ஒரு பெரிய கட்டிடக்கலைஞன் ஒரு கட்டிடத்தைப் பொறுப்புடன் செய்து கட்டி முடிக்கிறார். ஆனால் அதை உரியவரிடம் கொடுத்து விட்டபின் அது தன்னுடைய சாதனை என்று சொல்லிக்கொள்வதே இல்லை. தன்னுடைய உணர்வுகளை அதில் ஈடுபடுத்திக்கொள்ளாமல் தான் செய்ததாக அகந்தை கொள்ளாமல் மிகப்பெரிய காரியங்களைப் பலரும் சாதிக்கிறார்கள். இதை அன்றாட வாழ்விலும் நாம் பார்க்கிறோம். அற்புதமான கோயில்களை உருவாக்கிய சிற்பி அதைத் தன்னுடையது என்று சொல்லிக்கொள்வதில்லை. யாரும் விசாரித்து அவனைப்பாராட்டுவதும் இல்லை. அந்தக்கோயில் உறையும் தெய்வத்துக்கே அந்தப்பெருமை போய்ச்சேருகிறது. அதே போல நம்முடைய காரியங்களின் வெற்றியையும் இறைவனுக்கு அர்ப்பணித்து விடுவதே முறை. அப்படிக் கிடைக்கும் தன்னடக்கமே நமது அகந்தையை ஒழிக்கும்.

**–பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி**

**விநாயகருக்கு அறுகம்புல் உகந்ததாகக் கருதப்படுவது ஏன்?**

ஓரிடத்தில் முளைத்து, கொடிபோல் நீண்டு, ஆறிடங்களில் கிளைத்துக்கொண்டே போவது அறுகு. அறுகு போல் வேரூன்றி என்ற உவமையும் பழமொழிகளில் வழங்கப் பெறுகிறது. அங்ஙனமே மூலாதார மூர்த்தியாகிய குண்டலினில் வசிப்பவராகிய விநாயப்பெருமானே– குண்டலியினியாகிய அறுகை சுவாதிட்டானம் முதலிய ஏனைய ஐந்து இடங்களிலும் பொருந்தச் செய்து, சகஸ்ராரத்தில் பல நுனிகளாகத் தழைக்கச் செய்கிறார். அதனால் அறுகம்புல் அவருக்கு உகந்ததாயிற்று.

**எடுத்தணிவயல் விநாயகர் ஆலய மலரிலிருந்து......**

# எங்களை என்றும் இயக்கும் மாமனிதர்

அந்த மாமனிதர் மணிமாஸ்ரரோடு சீவித்த காலங்களை இலகுவாக மறந்துவிடமுடியாது. கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத்தில் அவர் செயலாளராகவும், நான் பொருளாளராகவும் 1964 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பணியாற்றிய அந்தப் பத்து ஆண்டு காலங்களும் பொற்காலம்!அவருடைய பேச்சும், மூச்சும்,செயலும் சைவமுன்னேற்றச் சங்கத்தினதும்,கொம்பனித்தெரு மக்களதும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலினதும் வளர்ச்சியில் உணர்வோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தவை.

பிரியமனமில்லாமல் பிரிந்து இலண்டனில் வாழத்தொடங்கிய காலத்தில்,1977 ஆம் ஆண்டு சைவமுன்னேற்றச் சங்கத்தை அவர் பணிப்பில்தான் இங்கு ஆரம்பித்தோம். இந்த ஆண்டு வெள்ளிவிழாவைக் கொண்டாடப்போகிற சமயத்தில் அவர் எங்களை விட்டுப்பிரிந்தது பெரும் துயரத்தில் நம்மை எல்லாம் ஆழ்த்திவிட்டது. சங்கம் இங்கு ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை, நமது சங்கம் அவரது ஆலோசனையில் வளர்ந்தது. அவர் சுகவீனமாக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்றறிந்ததும்,கடந்த பெப்ரவரி நான்காம் திகதி அங்கு சென்று,தொடர்ந்து பத்து நாட்கள் அவருடனேயே வைத்தியசாலையில் தங்கியிருந்த நினைவுகள் எல்லாம் விழிகளை நனைய வைக்கின்றன.

கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத்தின் 50ஆவது ஆண்டு பொன்விழா அடுத்த ஆண்டு! பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா இந்த ஆண்டு! இவைகளை நினைந்து அந்த அப்பழுக்கற்ற மனிதர் ஆனந்தத்தால் பூரித்திருந்தார். வெள்ளி விழாவில் அவரைக் கௌரவிக்க அந்த நாளை எண்ணிக்கொண்டிருந்தோம்.!

இதயம் வலிக்கிறது.



சைவமுன்னேற்றச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் துணைவியாருடன் வந்திருந்தார். விழ-ாவைச் சிறப்பித்தார். கௌரவித்தோம். சங்கம் பெருமைப்பட்டது. அவரோடு பழகிய நினைவுகள்,அவரது ஆவேசமானசேவை,செயல்படும் வேகம் எல்லாமே என் நெஞ்சோடு வாழ்கின்றன. நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து,நிறைவாக வாழ்ந்த நல்ல மனிதர்!அவரது இடம் நிறைவுசெய்ய முடியாதது. ஆனாலும் அவர் எண்ணங்களையும்,செயல்களையும் மனதில் கொண்டு அவர் பணியைத் தொடர்வதே நாங்கள் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

***மணி மாஸ்ரர்! நீங்கள் என்றுமே எங்கள் இதயத்தில் குருவாக வீற்றிருந்து,எங்களை இயக்கிக்கொண்டிருப்பீர்கள்.***

உங்கள் ஆத்மா சாந்தியடைக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**வ. இ.இராமநாதன்**
**தலைவர்**
**பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கம்**

# தொண்டருக்குத் தொண்டர்

**எங்களது அனுதாபச் செய்தி.**

சைவ முன்னேற்றச் சங்கத்தை உலகறியச் செய்த ஒரு சாதனையாளர் தன்னை விடுவித்துக் கொண்டார். மனித குலத்திற்கு உழைத்த உடலுக்கு ஓய்வும், ஓய்வின்றிச் சிந்தித்துச் செயலாற்றிய மனதுக்கு விடுதலையும் பரிபூரணமாகப் பெற்றுக் கொண்டார். சைவ முன்னேற்றச் சங்கத்தைத் தனது ஒரே எண்ணமாகக் கொண்டு செயற்பட்ட கடமையாளரை, ஒரு சாதகரை, சங்கத்தின் பீஷ்மரை சைவ உலகம் இழந்து விட்டது. மணி மாஸ்டர் என்று மிக எளிமையாக அழைக்கப்பட்ட இவருக்கு அஞ்சலி தெரிவித்துக் கடிதம் எழுதுவது என்பது மனிதனுக்குள் உள்ள இயலாமையைக் காட்டுகின்றது.

மணி மாஸ்டரின் சேவையின் எந்த ஆண்டு காலப் பகுதியை எடுத்துக் கொண்டு நான் எழுத முனைவேன்? கங்கையைப் போல் பரந்துள்ள இச் சேவையில் 1960, 1970, 1980, 1990 ஆகிய காலப் பகுதியைச் சுட்டிக் காட்டவா? அல்லது அதையும் கடந்து 2000லும் தொடர்ந்த பணிகளை எடுத்துச் சொல்லவா? சமூகத்திற்கு அவர் செய்ததைக் குறிப்பிடவா? அல்லது சமயத்திற்கு சங்கத்தின் வாயிலாகவும் ஆலயத்தின் ஊடாகவும் ஆற்றிய அரும் பணிகளைச் சற்றே தொட்டுக் காட்டவா?



எந்தத் துறையைச் சிறப்பித்து எழுதுவது! சமயப் பணிகளாகச் செய்தவற்றைப் பட்டியல் போட்டால் இமயம் வரை உயர்ந்திடும். சமய உணர்வின் வெளிக்காட்டாக சமுதாயத்திற்கு ஆற்றிய சேவைகள் மூலம் பயன் அடைந்த தமிழர்களின் உள்ளத்தின் தலைவாசலில் மணி மாஸ்டர் நிற்கின்றார். இருபாலையில் பிறந்த ஒரு மனிதர் தன்னை கொம்பனித்தெரு மக்களுக்கு முழுமையாக அர்ப்பணித்த வரலாற்றைப் பார்க்கும் போது வேறுபாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டுத் தொண்டனாக வாழ்ந்து காட்டியவர். அதே சமயம் சங்கத்தின் பாரிய பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி பல முக்கிய முடிவுகளை எடுத்து வெற்றி கண்டதன் மூலம் ஒரு தலைவனாகவும் திகழ்ந்தவர். கொழும்பு நகரில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்குச் சரியைத் தொண்டு செய்தவர். அக் கோயிலின் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்த உண்மையை சைவ மக்கள் மறக்க மாட்டார்கள். அந்த இராஜகோபுரம் மணி மாஸ்டரின் உயர்வை நிரந்தரமாக நிலைநிறுத்தும்.

புதுப்புதுத் திட்டங்களைத் துணிவுடன் ஆரம்பிப்பார். முருகனையே நம்பிக் கொண்டு காரியங்களில் இறங்கிவிடுவார். இத் திட்டங்களில் ஆரம்பித்தால் இவரை யாராலும் நிறுத்தவோ அவரின் வேகத்தைக் குறைக்கவோ முடியாது. எத்தனைக் கடினமானாலும் எத்தனை இடையூறுகள் வந்தாலும் ஏதோ ஒரு வகையில் பலரது உதவியையும் பெற்று தான் ஆரம்பித்த பணியைச் செய்து வெற்றியைக் காண்பார். அவ் வெற்றியில் திளைத்து பெருமைப்பட்டுக் கொள்வார். அதே வேளை முருகன்தான் வழி காட்டினான் என்றும் ஏற்றுக் கொள்வார். ஒரு திட்டத்தின் நிறைவில் அது போதும் என்று அமைதியடையாமல் மற்றொரு புதிய பாரிய முயற்சியில் இறங்கிவிடுவார். அவருடன் இருப்பவர்கள் இது சாத்தியமில்லை என்று தயங்கினாலும் தன்னம்பிக்கை தளராது மீண்டும் மீண்டும் சாதனைகளைப் படைப்பார்.

நால்வர் நெறி மலர், நால்வர் மணி மண்டபம், நால்வர் இல்லங்கள், நால்வர் நூலகம், தொண்டரணி, மாதரணி, திருவருளால் திக்குலா, பிடி அரிசித் திட்டம், சத்துணவு வழங்கல், லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம், இருபாலைச் சைவ முன்னேற்றச் சங்கம், சிலாபம் சைவ முன்னேற்றச் சங்கம், பேலியாகொடை சைவ முன்னேற்றச் சங்கம் இவைகள் மணி மாஸ்டரின் சாதனைகளுக்கு ஒரு சில உதாரணங்கள். இவைகளின் வெற்றிகளுக்குப்

பல அன்பர்கள் காரணமாக இருக்கின்றார்கள். ஆனால் மணி மாஸ்டர்தான் மூல காரணம் என்றால் அதை யாரும் மறுக்க முடியாது.

நாங்கள் பலனடைய வேண்டுமென இறைவன் அனுப்பிவைத்த ஒரு செயலாளர். தனது செயல்களை ஒடுக்கிக் கொண்டார். வழியை அமைத்துத் தந்துள்ளேன். இனி நீங்கள் வாழுங்கள், சங்கத்தையும் சமயத்தையும் வளருங்கள் என்று மற்றொரு சகாப்தத்திற்கு அடிக்கல் நாட்டியுள்ளார். இதுவும் மணிமாஸ்டரின் பாரிய திட்டமே.

அவர் அமைத்துத் தந்த பந்தலில் நாம் இன்று நிழல் பெற்றுப் பிறருக்கும் அப்பயன் கிடைக்க வழி செய்யலாம். இப் பந்தலின் அழகை மழுங்க விடாமல் காப்பது இது இன்றிருக்கும் இளைஞர்களின் எண்ணத்தில் தங்கியுள்ளது.

மாஸ்டர், நாங்கள், அதாவது இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினர், உங்களைப் பார்த்ததில் உங்களுடன் இணைந்து சில விழாக்களை இங்கு நடத்தியதில் சற்றுத் திருப்திப்படுகிறோம். எமது வெள்ளி விழாவில் கலந்து சிறப்பிப்பீர்கள் என்ற எண்ணம் வீணாகிப் போனது. நாம் கொடுத்து வைக்கவில்லை. இவை பொய் வார்த்தைகள் அல்ல உண்மையே.

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கச் செயலாளராக ஒரு கருத்தைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். மணி மாஸ்டருக்கு மணி மண்டபங்கள் தேவையில்லை. நினைவு ஸ்தூபிகள் அவசியமில்லை. சிலை வைக்கச் சிரமப்பட வேண்டாம். இவைகளை விட அவரின் சிந்தனையில் சிலவற்றை நாம் தொடர்ந்து கடைப்பிடித்தால் சைவ உலகம் முன்னேறும்.

மணி மாஸ்டரை எரித்து விட முடியாது. புதைத்து விடவும் முடியாது. அவர் விதைக்கப்பட்டு விட்டார்.

**சங்க ஆட்சிக் குழுவின் சார்பில்**
**சதாசிவம் ஆனந்தத்தியாகர்.**
**கௌரவ பொதுச் செயலாளர்**

◆◆◆◆◆◆


# the longer you talk, the more you donate!

- as you talk to your loved ones, the community shares the benefits
- an opportunity to help a good cause with no hidden costs
- should you choose to use the Alpha Telecom service, the funds will be donated to our charity
- this is a joint venture by Alpha Telecom and Saiva Munnetta Sangam (SMS)

SMS requires funds for our:

- elderly centre
- cultural activities
- mother tongue education
- religious education
- community services
- other projects

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
Saiva Munnetta Sangam (UK)
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel: 020 8514 4732 020 8550 2730 Fax: 01268 561805
Bankers: Lloyds TSB Bank Plc & National Savings Bank
www.smsuk.org.uk
Registered Charity No: 292085

alpha TELECOM

| | | | |
|---|---|---|---|
| sri lanka | 20p/min | malaysia | 8p/min |
| india | 30p/min | singapore | 8p/min |
| pakistan | 24p/min | usa | 5p/min |
| bangladesh | 30p/min | canada | 5p/min |
| mauritius | 30p/min | europe from | 2p/min |

community service through hindu concern

call FREE to open an account
0800 279 8130

# ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்
## குறொய்டன் - இலண்டன்

**21 Brigstock Road, Thornton Heath, Croydon, CR7 7JJ.Tel: 020 8689 3466**

ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பெற்றுவளர்த்த நாடு, மொழி, இவற்றிற்குத் தொண்டு செய்வதோடு அமையாது பண்பாட்டினை வளரக்கும் தன் சமயத்திற்கும் தொண்டு செய்தல் இன்றியமையாதது. உலகம் முழுவதற்கும் முதற்காரணமாகிய பொருள் பிரணவம். அதற்கு தலைமையாக விளங்கும் சிவசக்தியின் புதல்வருக்கு விநாயகர் என்று பெயர். சைவ, வைணவ மதத்தினர் சமய வேறுபாடின்றி இவரை வழிபடுகிறார்கள். தனக்கு மேலான தலைவர் இல்லாத காரணத்தினால் அவருக்கு விநாயகர் என்பர். முதன் முதல் செய்யப்படும் கிரியை விநாயகர் வணக்கம் எனப்படும். நாம் தொடங்கும் எக்காரியமும் இனிது நடந்து முடிவுற முதல்வன் கணபதியை வணங்குதல் வேண்டும்.

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று** என ஒளவையார் கூறியுள்ளதற்கேற்ப இலண்டன் மாநகரில் தோண்டன்ஹீத், குறொய்டன் பகுதியில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம். இந்தப்பகுதியில் ஒரு விநாயகர் ஆலயம் அமைக்கவேண்டும் என்று இந்துக்கள் பலரும் ஆவலுற அதன் காரணமாக ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம் அமைய சில ஆக்கபூர்வமான கிரியைகள் ஆரம்பமாயின. விக்கிரமவருஷம் ஆவணி மாதம் 01-09-2000 ஆம் ஆண்டு சதுர்த்தி பொருந்திய நன்நாளில் ஸ்ரீ சக்தி கணபதியின் முதல் பூஜையை குறொய்டன் பகுதியில் பிரம்மஸ்ரீ ராமநாத வாகீஸ்வரக்குருக்கள் தொடக்கிவைத்தார். அதன் பின்னர் குருக்களின் இல்லத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் விஷேச பூஜைகள் நடந்துவரலாயின. அதன் பின்னர் பிள்ளையார் கதை 21 நாட்களும் இலண்டன் றோட்டில் அமைந்த மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டா டப்பட்டது.


ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம் - குறொய்டன்

25-01-02 தை மாதம் வெள்ளிக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி 27-01-02 தை மாதம் புனர்பூச நட்சத்திரத்திலே நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பெருவிழாவுடன் தனக்குரிய சக்தியை தன்னகத்தே கொண்டு மகா சக்தி கணபதியாக அருள்பாலிக்கின்றார்.

.30-06-2002 இல் ஸ்ரீமுருகன், ஸ்ரீபைரவ மூர்திகளும், நவக்கிரஹங்களும் நூதனப்பிரதிஷ்டை செய்யப் பட்டன.

ஆலயத்தில் சங்கீதம், மிருதங்கம் போன்ற நுண்கலை வகுப்புக்களும், சைவசமய வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

அத்துடன் முதியோர்கள், சுகவீனமுற்றவர்கள் பகல் நேரத்தில் ஆலயத்தில் தங்கி தமது நேரத்தை ஆலயத்துடனும், இறைசேவையிலும் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.


அனைவருக்கும் ஸ்ரீ சக்தி கணபதியின் அருட்பிரவாகம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

**ஸ்ரீமதி - கு.சோமாஸ்கந்தசர்மா**
**குறொய்டன்**

என்னுடைய ஈழப்பயணத்தின் திருகோணமலைப் பக்கங்களைப் படித்துக்கொண்டிருக்கிறீர்கள். திருகோணமலைக்கே சிறப்புத்தரும் திருக்கோணேஸ்வரத்தைத் தரிசித்ததைப் பற்றிக் கூறியிருந்தேன். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்த ஆலயத்தைத் தரிசிக்கவேண்டியது மிகமிக அவசியமாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயத்தில் ஏராளமான சிறப்பம்சங்கள் உள்ளன. இந்த ஆலயத்தை நினைக்கும்போது பழைமைவாய்ந்த அற்புதமான தலமிது. ஏன், அகத்திய முனிவர் தவம் செய்த புண்ணிய தலமும் இதுதானே? மூவர் தேவாரங்களில் கூட திருகோணமலை சிறப்பித்துக் கூறப்படுகிறது. நாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகத்தில் தெக்காரும் மாகோணத்தானே என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய ஊர்த்தொகைத் திருப்பதிகத்தில் ........... மஙறக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே...... என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளவைகளை நாம் மனங்கொள்ள வேண்டும்.

# ஒரு குளிர்மையான ஈழப்பயணம்

மு. நற்குணதயாளன்




நிரை கழலரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோண மாமலை அமர்ந்தாரே.

என்ற பாடல் நினைவுக்கு வருகின்றது. திருக்கோணேஸ்வரத்தையே தெட்சிண கைலாயம் என்று கூறுவோரும் உள்ளனர். திருக்கோணேஸ்வரத்தில் இராவணன் வெட்டு என்று கூறப்படும் மலைவெட்டினை என்பிள்ளைகளுக்குக் காட்டியபோது அவர்கள் வியப்படைந்தார்கள். மலையின் உயரத்தில் நின்று கொண்டு கடல்வெளியைப் பார்க்கும்போது எவ்வளவு ரம்மியமாக இருந்தது. வரலாற்று ரீதியாகப் பலவித கதைகள் கூறப்படுகின்றன. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இராவணன் வழிபட்ட தலமென்றும் கூறப்படுகின்றது. திருமூலர் சிவபூமி என்றுகூறியது கூடத் திருக்கோணேஸ்வரத்தையே என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இந்தத் திருமூலர் வாழ்ந்தகாலம் இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகும். இத்தகு பெரியபுராணத்தை எடுத்துக்கொண்டால் சேக்கிழார் சுவாமிகள் **மன்று திருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையான் தமைப்போற்றி வணங்கிப் பாடி என்று பாடியுள்ளார்.** இத்தகு சிறப்புத் தன்மைகள் வாய்ந்த பாடல்பெற்ற தலத்தில் பதினேழு வருடங்களுக்குப் பிறகு பாதம்வைத்த நிகழ்வு என் தேகத்தில் புளகாங்கிதத்தை உண்டுபண்ணியது. உள்ளுணர்வில் ஒரு பொறிதட்டியது போன்ற உணர்வு ஏற்பட்டது. இத்தலத்தையா இவ்வளவு காலமும் தரிசனத்திற்குத் தடைசெய்திருந்தார்கள் என்று நினைக்கும் போது மனதுக்கு வேதனையாக இருந்தது. ஆலயத்துள் பிரவேசித்து இறைவனை வணங்கினோம். குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெரியகட்டிடமில்லை. மிக அழகான அமைப்பாக இருந்தது. அர்ச்சகர் பூசைசெய்தார். கோணமாமலையானை மனங்குளிர வணங்கினோம். அதன்பின்னர் அர்ச்சகர் எங்கள்கைகளில் நூல்கட்டினார். சந்தோசமாக இருந்தது. இந்தச் சந்தோசத்தை நீங்களும் அனுபவிக்கவேண்டுமல்லவா? இப்போது மண் மலர்ந்து நிற்கின்றது. தடுப்பார் இல்லை. தரிசனத்தைத் தாராளமாகச் செய்யலாம். சென்று வாருங்கள். ஐயன் அருள்பெற்றுவாருங்கள்.
மீண்டும் அடுத்த கலசத்தில் சந்திப்போம்.


## Connecting Hindus and Hinduism around the world since 1979

**Hinduism Today International** is a full-color quarterly journal published by Satguru Bodhinatha Veylanswami, successor to Gurudeva, Sivaya Subramuniyaswami

- Global news of Hinduism and its ongoing global renaissance
- Ancient knowledge, wisdom and insight
- Hindu spiritual leaders of all traditions
- Family issues, art, humour & more





- **For a free sample copy:** visit www.hindu.org/free/
- **To subscribe (£32/1 yr.):** visit www.HinduismToday.com or call our UK office.
- To send a gift subscription to someone in **Sri Lanka or India** for only £13 per year, contact our UK office.
- **To subscribe directly from Sri Lanka** (only US$10) or India (only INR 355), contact our India office.




**UK:** Hinduism Today, 483 Green Lanes, London, N13 4BS
Tel: 020 8886 9028 • ht@prime-secretarial.co.uk

**India:** Hinduism Today
Central News Agency Pvt. Ltd.
23/90 Connaught Circus
New Delhi - 110 001
India
info@cna-india.com
Fax : +91 11 3626036






## SHIPPING- AIR FREIGHT-TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE- PERSONAL EFFECTS, HOUSE HOLD GOODS, VEHICLES, MACHINERY, ETC.**

**TO COLOMBO AND WORLD WIDE DESTINATIONS**

SriLankan

**MAIN AGENT FOR SRI LANKAN AIRLINES**

SriLankan

**PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE**

**ALL YOUR GOODS GO TO OUR BONDED WARE HOUSE IN COLOMBO**

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

## GLEN CARRIERS LIMITED

IATA

**TEL : 020 8740 8379/ 020 8749 0595**

**FAX : 020 8740 4229**

ATOL 4395

**BONDED WARE HOUSE**

**LAKSIRISEVA, 66 NEWNUGE RD, PELIYAGODA**

**14 Allied Way, Off Warple Way, Acton, London, W3 0RQ**



# இங்கிலாந்திருந்து ஈழம்வரை பாயும் ஈலிங் கனகதுர்க்கை அம்மனின் அருளாட்சி !!



## வடக்கு கிழக்கு மலையகத்திற்கு கடந்த 18 மாதங்களில்

## £73,957 பவுண்கள்

*இம் என்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம் இவ்வாறங்கே*
*செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே*
*அறமாகித் தீர்ந்த போதில்*
*அம்மை மனங் கனிந்திட்டாள்*

எமது தமிழீழத் திருநாட்டைப் பொறுத்த வரை பாரதியின் வாக்கு இன்று பலித்து விட்டது. ஈலிங் கனக துர்க்கையின் வாரி வழங்கும் கைகள் அவளது அடியார்களின் அளப்பரிய ஆதரவினால் நீண்டு வளர்ந்து கொடிய யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கி பெற்றோரை இழந்த எம் சிறார்களின் கண்ணீரைத் துடைக்கும் பணியில் தொடர்கிறது.

தொடரும் இப்பணியில் நாம் நேசக்கரம் நீட்டிய போதெல்லாம் அக்கரத்தைப் பற்றி போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்க உம் பணி என்று தோளோடு தோள் கொடுத்து உடல் மண்ணுக்கு உயிர் எம் உடன்பிறப்புக்களுக்கு என்று அர்ச்சனைத் தட்டுக்களா அவை அத்தனையும் எம் இள நெஞ்சங்களுக்கே என்று தட்டுக்களுக்கே தட்டுப்பாடு ஏற்படுமளவிற்கு நீங்கள் அள்ளி வழங்கியது யாவரும் அறிந்ததே.

நூம் செல்லும் இப்பாதை கரடு முரடானதாக இருந்தாலும் அன்னையின் அருளும் உங்கள் ஆதரவும் எம் கைகளுக்கு வலுவூட்டுகின்றன. ஆலயத்தின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களின் பராமரிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்ற எமது தாரக மந்திரத்திற்கு ஏற்ப நாம் இது வரை வழங்கிய நன்கொடைகள் வருமாறு:

| | | | £ |
|---|---|---|---|
| 1. | நவம்பர் 2000 | தமிழர் புனர்வாழ்வுக் கழகம் | 5,000 |
| 2. | டிசெம்பர் 2000 | துர்க்காபுரம் மகளிர் இல்லம் தெல்லிப்பழை | 1,200 |
| 3. | | யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் கிளிநொச்சி | 1,000 |
| 4. | ஜன.பெப் 2001 | சத்திய சாயி சேவா நிலையம் வவுனியா | 1,000 |
| 5. | | இந்து இளைஞர் ஒன்றியம் கிளிநொச்சி | 1,000 |
| 6. | | மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம் மட்டக்களப்பு | 750 |
| 7. | | துர்க்காபுரம் மகளிர் இல்லம் தெல்லிப்பழை | 1,500 |
| 8. | | யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை | 500 |
| 9. | | திலகவதியார் மகளிர் இல்லம் மட்டக்களப்பு | 750 |
| 10. | மார்ச்.ஏப்ரல் 2001 | மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம் மட்டக்களப்பு | 3,000 |
| 11. | மே.யூன்.யூலை 2001 | இந்து இளைஞர் ஒன்றியம் கிளிநொச்சி | 1,000 |
| 12. | | சத்திய சாயி சேவா நிலையம் வவுனியா | 1,000 |
| 13. | | யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் கிளிநொச்சி | 1,000 |
| 14. | | விபுலானந்த மாணவர் இல்லம் அக்கரைப்பற்று | 900 |
| 15. | | மகாதேவ ஆச்சிரமம் கிளிநொச்சி | 900 |
| 16. | | இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களுக்காக | 1,000 |
| 17. | அக்டோபர் 2001 | இந்து இளைஞர் ஒன்றியம் கிளிநொச்சி | 1,000 |
| 18. | | சத்திய சாயி சேவா நிலையம் வவுனியா | 1,225 |
| 19. | | ஏழாலை சிறீ வசந்த நாகபூசணி அம்பாள் சிறுவர் இல்லம் | 1,000 |
| 20. | | மகாதேவ ஆச்சிரமம் கிளிநொச்சி | 1,000 |
| 21. | | மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம் மட்டக்களப்பு | 2,000 |
| 22. | நவெம்பர் 2001 | சைவ வித்தியா விருத்திச் சங்கம் யாழ்ப்பாணம் | 3,000 |
| 23. | | துர்க்காபுரம் மகளிர் இல்லம் தெல்லிப்பழை | 500 |
| 24. | | சிவானந்த தபோவனம் திருகோணமலை | 371 |
| 25. | டிசெம்பர் 2001 | வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் மானிப்பாய் | 500 |
| 26. | | ஹற்றன் அம்பேகமுவ அரச ஓய்வூதியர் சங்கம் | 500 |
| 27. | | இனிய வாழ்வு இல்லம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு | 500 |
| 28. | | திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம் தம்பிலுவில் | 500 |
| 29. | | சைவ வித்தியா விருத்திச் சங்கம் யாழ்ப்பாணம் | 3,000 |
| 30. | | இந்து இளைஞர் மன்றம் முல்லைத்தீவு | 1,000 |

| | | | |
|---|---|---|---|
| 31. | | இந்து சமயப் பேரவை நல்லூர் யாழ்ப்பாணம் | 500 |
| 32. | | அன்பு இல்லம் திருகோணமலை | 1,000 |
| 33. | | SLEAT நிறுவனம் திருகோணமலை | 750 |
| 34. | | சிவானந்த தபோவனம் திருகோணமலை | 500 |
| 35. | | சமூக நலன்புரி அமைப்பு களுவாஞ்சிக்குடி | 1,750 |
| 36. | ஜன.பெப் 2002 | வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் மானிப்பாய் | 1,015 |
| 37. | | சைவ வித்தியா விருத்திச் சங்கம் யாழ்ப்பாணம் | 255 |
| 38. | | அன்பு இல்லம் திருகோணமலை | 375 |
| 39. | | சமூக நலன்புரி அமைப்பு களுவாஞ்சிக்குடி | 1,110 |
| 40. | | சிவானந்த தபோவனம் திருகோணமலை | 210 |
| 41. | மார்ச். ஏப்ரல் 2002 | தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மட்டக்களப்பு (அரச்சனைத்தட்டு விற்பனை மூலம்) | 1,020 |
| 42. | | அன்பகம் வவுனியா | 500 |
| 43. | | சமூக நலன்புரி அமைப்பு களுவாஞ்சிக்குடி | 1,500 |
| 44. | | இலண்டன் கனகதுர்க்கை அம்மன் இல்லம் மட்டக்களப்பு (காக்கும் கரங்கள்) | 1,275 |
| 45. | | குருகுலம் சைவச்சிறுவர் இல்லம் கிளிநொச்சி | 825 |
| 46 | | ஸ்ரீ கணேசானந்த சேவாச்சிரமம் கிளிநொச்சி | 425 |
| 47 | | திலகவதியார் இல்லம் மட்டக்களப்பு (காக்கும் கரங்கள்) | 705 |
| 48. | | மலையகச் சிறுவர் இல்லம் (காக்கும் கரங்கள்) | 690 |
| 49. | | விபுலானந்த சிறுவர் பராமரிப்பு இல்லம் மட்.(காக்கும் கரங்கள்) | 60 |
| 48. | | அன்பகம் வவுனியா (காக்கும் கரங்கள்) | 809 |
| 49. | | அன்பு இல்லம் திருகோணமலை (காக்கும் கரங்கள்) | 975 |
| 50. | | சிவானந்த தபோவனம் திருகோணமலை (காக்கும் கரங்கள்) | 735 |
| 51. | | சைவ வித்தியா விருத்திச்சங்கம் யாழ் (காக்கும் கரங்கள்) | 795 |
| 52. | | ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் சிறுவர் இல்லம். யாழ்(கா.கரங்கள்) | 165 |
| 53. | | தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (காந்தி சேவா சங்கம் திருகோணமலை | |
| 54. | | (காக்கும் கரங்கள்) | 315 |
| 55. | | தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மட்டக்களப்பு | 500 |
| 56. | | ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் வவுனியா(கண் சத்திரசிகிச்சை) | 1,000 |
| 57. | | தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு - | 500 |
| 58. | | மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் | 500 |
| 59. | | தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முல்லைத்தீவு (அர்ச்சனைத் தட்டு விற்பனை மூலம்) | 2,045 |
| 60. | | அம்புலன்ஸ் வண்டி கிளிநொச்சி | 9,000 |
| 61. | | குருகுலம் சைவச்சிறுவா் இல்லம் கிளிநொச்சி (80 சிறார்)ஏப்ரல் | 825 |
| 62. | | ஸ்ரீ கணேசானந்த சேவாச்சிரமம் கிளிநொச்சி (40 சிறார்)ஏப்ரல் | 425 |

<u>பின்வரும் நிதிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பப்படுவதற்காக உள்ளன.</u>

| | | |
|---|---|---|
| வைத்திய மாணவர் சங்கம் யாழ் பல்கலைக்கழகம் | 750 | |
| மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று | 500 | |
| யாழப்பாணம் போதனா வைத்தியசாலை | 1,000 | 2,250 |
| ஏப்ரல் 2002 மாதத்திற்குரிய மூன்றில் ஒன்றின் மீதி | | 1,057 |
| மொத்தம் | | **73,957** |

அன்னையின் காக்கும் கரங்கள் திட்டமும் (Save a child) தன் வெற்றிப் பாதையில் வீறு நடை போடுகின்றது. இத்திட்டத்தின் கீழ் இது வரை £1,950 (February) பவுண்கள்இ £3,129 (March) அனுப்பப்பட்டுள்ளன. £3,395 (April) பவுண்கள் அனுப்பப்படுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

எமது இலக்கு **ஒவ்வொரு வருடமும்** "SAVE A CHILD" இத்திட்டத்தின் கீழ் £100,000 பவுண்களை பெற்றோரை இழந்து அனாதை ஆசிரமங்களில் தஞ்சமடைந்துள்ள சிறுவர்களுக்காகப் பயன்படுத்துவதே.

இத்திட்டத்தின் கீழ் 800 க்கு மேற்பட்ட சிறுவர்களைப் பொறுப்பேற்று பராமரிப்பதற்காகப் பல்வேறு நிறுவனங்களிலுமிருந்து எமக்கு விண்ணப்பங்கள் கிடைத்தன. APRIL 31 வரை மொத்தம் 246 சிறுவர்கள் பொறுப்பேற்கப்பட்டுள்ளார்கள்.
ஏமது இலக்கு இதில் 556 சிறுவர்களுக்கு டிசெம்பர் 2002 க்கு முன் பாதுகாவலர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதே. மிகுதி 310 சிறுவர்களையும் உங்களில் பலர் முன்வந்து பாதுகாவலர்களாகப் பொறுப்பேற்பீர்கள் என நாம் நம்புகிறோம்.

இதன் மூலம் உங்கள் சமூகத்திற்கு நீங்கள் செய்யும் தார்மீகக் கடமை ஒன்று நிறைவேற்றப்படும் திருப்தி உங்களுக்கு ஏற்படுவதோடு ஈழத்தின் வடக்கு கிழக்கு மலையகத்தில் அனாதைகள் என்ற பெயர் அறவே ஒழிந்து விடும். இச்சிறார்களைப் பொறுப்பேற்க விரும்புபவர்கள் ஆலய அலுவலகத்துடன் **0208 810 0835** என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

நூளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக கனக துர்க்கையின் ஆலயம் புது மெருகு பெற்று வருவதோடு அதன் நித்திய கருமங்கள் பாதிப்புறா வண்ணம் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பாய் என்ற வாக்கிற்கேற்ப எமது திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

**கடந்த 18 மாதங்களில் மொத்தமாக £73,957 பவுண்கள் அன்னை கனகதுர்க்கையின் அருளினாலும் அடியார்களின் ஏகோபித்த ஆதரவினாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பணிவன்போடும் மகிழ்ச்சியோடும் அறியத் தருகிறோம்.**

**சி.சத்தியானந்தராஜா**






# உங்கள் மழலைகள் பசித்தேங்கி அழுவதோ!

*குச்சு வீடும் இல்லை*
*கோவணம் தானுமில்லை*
*உச்சி வெய்யில் வேளையில்*
*உண்ண உணவு கேட்டு*
*விச்சு அழும் பிள்ளை*
*விம்மல் தவிர்ப்பதற்கு*
*எச்சில் உணவும் இன்றி*
*ஏங்கித் தவிக்கின்றோம்*

*எங்கள் தமிழ் மண்ணில்*
*ஏழ்மை வாழுவதோ*
*உங்கள் மழலைகள் பசித்*
*தேங்கி அழுவதோ*
*வங்கக் கடல் கடந்து*
*வாழும் தமிழர்களே*
*எங்கள் குறை தீர்க்க*
*ஏன் இன்னும் தாமதம்?*

*கொஞ்சி மகிழ்ந்த வேளை*
*கொடுத்தார் எங்கு சென்றார்*
*கெஞ்சிக் கதறிடினும்*
*கேட்பார் யாருமுண்டோ*
*அஞ்சி வாழ்வதற்கோ*
*அவனியில் நாம் பிறந்தோம்*
*பிஞ்சு மனத்து எம்*
*புலம்பல் கேட்பீரே!*

*செல்வம் மிகுந்தோர் மிகு*
*செழிப்பாய்த் தந்திடுவீர்*
*கல்வி மிகுந்தோர் அதி*
*கனிவாய்த் தந்திடுவீர்*
*அல்லாதோர் கொஞ்சம் அள்ளி*
*அன்பாய்த் தந்திடுவீர்*
*எல்லோரும் சேர்ந்தே எம்*
*ஏழ்மையைப் போக்கிடுவீர்*

—தமிழரசி—


தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகை மாளிகை

# Ambaal Jewellers

## தமிழர் நகை மாளிகை

**THE LEADERS IN 22CT GOLD JEWELLERY**

ருட்டிங் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகாமையில்



மங்கள மங்கையரின் நகைகளுக்கு
தனி அழகு தரும் **AMBAAL JEWELLERS**
பளிச்சிடும் பசும் பொன் பார்ப்பவர்கள்
மனதைக் கொள்ளை கொள்ளும்
பத்தரை மாற்றுத் தங்க நகை அரங்கம்
**AMBAAL JEWELLERS**

ஆரவாரமில்லாமல்
வாடிக்கையாளர்களுக்கு நன்மையான
பணி செய்வதே நமது நோக்கம்

மலிவின் மறு பெயர்

## அம்பாள் ஜுவலர்ஸ்

திருத்த வேலைகள் உடனுக்குடன் கவனிக்கப்படும். பொன்னுருக்கல் இலவசமாக செய்து தரப்படும்.

**உங்கள் எண்ணம் போல் வண்ணம் கொண்ட**
**ஆபரணங்கள் அணி வகுக்கும் அழகான தங்க நகைச் சோலை**

ஏழு நாட்களும் திறந்திருக்கும்

## அம்பாள் ஜுவலர்ஸ்

**176, Upper Tooting Road, London SW17 7ER.**

**Tel: 020 8672 9955 Fax: 020 8672 7097**

**web:ambaaljewellers.com E-mail: sales@ambaaljewellers.com**




சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 020 8646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14.07. 2002 அன்று வெளியிடப்பட்டது.